Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 21 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 27 (05.07.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:278

சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலாகு
பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும்
எந்தநேரமும்
துரிதமாகவும் குறைந்த
கட்டணத்தில் அனுப்பிட

FedEx Express


திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ..ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

## இன்று கரும்புலிகள் நாள்

# தமிழர் தாயகப் பகுதியெங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு!




யாழ்ப்பாணம் —

தாயக விடுதலைப் போராட்டத்தில் தம்மை உயிராயுதமாக அர்ப்பணித்த கரும்புலி மாவீரர்களை நினைவுகூரும் கரும்புலிகள் நாள் இன்று மிகுந்த உணர்வெழுச்சியுடன் தமிழர் தாயகப் பகுதியெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.


யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கரும்புலிகள் நாளையொட்டி எழுச்சிப் பேரணிகளும், நினைவுக் கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை 265 கரும்புலிகள் தமது உயிரை ஆகுதியாக்கியுள்ளனர். இவர்களில் கடற்கரும்புலிகள் 186 பேரும், தரைக்கரும்புலிகள் 79 பேரும் அடங்குவார்கள்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் உள்ள நெல்லியடி மகா வித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த படையினர்மீது முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் தாக்குதலை மேற்கொண்டார். இவரின் பாதையில் மக்களைப் பாதுகாக்கவும், மண்ணை மீட்பதற்கும் கரும்புலிகள் ஆகுதியாகியுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# குருநகர் இறங்குதுறை முன்பாக மீனவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்!





யாழப்பாணம் —

இராணுவத்தினரின் அசமந்தப் போக்கின் காரணமாக, மின்சார இணைப்பில் சிக்கி இளைஞன் ஒருவன் குருநகர்ப் பகுதியில் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்தும் - மீனவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் கெடுபிடிகள் உடன் தளர்த்தப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தும் - குருநகர் மீனவர்கள் நேற்று இறங்குதுறைப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதுடன், உண்ணா விரதப் போராட்டம் ஒன்றிலும் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் இறங்குதுறையின் முன்பாக ஒன்றுகூடிய மீனவர்கள் இறங்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பை அமுல்படுத்துமாறு அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## விடுதலைப் புலிகள் வேண்டுகோள்

கிளிநொச்சி —

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுவது சர்வதேச சமூகத்தின் கைகளிலேயே உள்ளது. மகிழ்ச்சி தெரிவிப்பதுடன் மட்டும் நின்று விடாமல் -உடன்பாட்டை அமுல்படுத்துமாறு சந்திரிகா அரசை சர்வதேச சமூகம் அறிவுறுத்த வேண் டும் என விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ பத்திரிகையான விடுதலைப் புலிகள் ஏட்டில் ஆசிரியர் தலையங்கத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுனாமி அனர்த்தம் நடந்து 6 மாதங்களின் பின்பு சர்வதேசத்தின் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் சந்திரிகா அரசு அரைமனதுடன் உடன்பாட்டில் கைச்சாத்திட்டுள்ளது.

சந்திரிகா அரசு இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டிருந்தாலும் அதை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளும் புறச்சூழல் சிங்கள தேசத்தில் இன்னும் எழவில்லை.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதால் சிங்களப் பேரினவாதிகள் கொதிப்படைந்து போயுள்ளனர். ஜே.வி.பி. , ஜாதிக ஹெல உறுமய மற்றும் பௌத்தமத உயர் பீடத் தலைவர்கள் - பிக்குகள் உடன்பாட்டிற்கு எதிராக வீதியில் இறங்கிவிட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# லான்ஸ் கோப்ரல் தர அதிகாரி திருமலையில் சுட்டுக்கொலை!

# கொல்லப்பட்ட படையினர் மூவரும் கருணாகுழுவை வழிநடத்தியவர்கள்!

# லான்ஸ் கோப்ரல் தர அதிகாரி திருமலையில் சுட்டுக்கொலை!

திருகோணமலை —

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தானிய கமவில் இராணுவத்தைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. விடுமுறையில் வீட்டுக்குச் சென்றிருந்த லான்ஸ் கோப்ரல் சுஜித் பிரியந்த (வயது 26), இரவு விருந்துக்குச் சென்றுவிட்டு திரும்பும்போது சீனன்குடாவுக்கு அருகில் வைத்து துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இவர், அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த நான்கு வருடங்களாக பிரெட்றிக் கோட்டையிலுள்ள கஜபா படையணியின் முகாமில் பான்ட் வாத்தியக்குழுவில் இவர் பணியாற்றி வந்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - இவர் இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர் என இன்னொரு தகவல் தெரிவித்தது.

# கொல்லப்பட்ட படையினர் மூவரும் கருணாகுழுவை வழிநடத்தியவர்கள்!

## இணையத்தளத் தகவல்கள் தெரிவிப்பு

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டம் ஊறணியில் கடந்த வாரம் சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூன்று படையினரும், மட்டக்களப்பில் கருணா குழுவை வழிநடத்தி வந்தவர்கள் என்று இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ புலனாய்வுத்துறையின் முதலாவது பற்றாலியனைச் சேர்ந்த ஸ்ராவ் சார்ஜன்ட் ஆர்.எம்.எஸ்.குலரத்ன, 22 ஆவது கஜபாகு பற்றாலியனிலிருந்து இராணுவ புலனாய்வுத்துறையுடன் இணைக்கப்பட்ட, கோப்ரல் சமன்குமார மற்றும் 8 ஆவது கவசப் படையணியைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் சமிந்தகுமார ஆகியோர் கடந்த 30 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்கள் மூவரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நீதிபதி அம்பேபிட்டிய கொலை; ஐவருக்கு மரண தண்டனை!



கொழும்பு —

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை வழக்கில் மொகமட் நவ்பர் உள்ளிட்ட ஐவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் உபாலி அபயரத்ன தலைமையிலான மூவர் அடங்கிய நீதிபதிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பாதுகாப்புக் குறித்து இன்னமும் முடிவேதும் இல்லை!

## கண்காணிப்புக்குழு பேச்சாளர்

கொழும்பு —

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தற்போது தோன்றியுள்ள நெருக்கடியான நிலைக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்படுமென தாம் நம்புவதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலவ்ஸ் ரோட்ரயர் தெரிவித்த தாவது -

கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட், விடுதலைப் புலிகள் விதித்துள்ள 14 நாட்கள் காலக்கெடு குறித்து நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

எனினும், இந்தக் கலந்துரையாடலில் விடு தலைப் புலிகளின் போக்குவரத்துக்கான பாது காப்புக் குறித்து எவ்வித இறுதிமுடிவும் எடுக்கப்படவில்லை. ஆனாலும், இருதரப்புக்கும் இடையில் பொதுவான இணக்கப்பாடொன்று விரை வில் ஏற்படுமென நாம் நம்புகிறோம்.

சமாதான முயற்சிக்கும், போர்நிறுத்தத்திற்கும் இரண்டு தரப்பாலும் உடனடியாக எந்தவித அச்சுறுத்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேக்கு எதிராக ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்!



கொழும்பு —

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தை நோக்கி ஜே.வி.பியினர் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர்.

நூற்றுக்கணக்கான ஜே.வி.பியினர் - லிப்டன் சதுக்கத்தில் [illegible]ந்து நோர்வே தூதரகத்தை நோக்கி பேரணியாகச் சென்றபோது பொலிஸார் அவர்களைத் தடுத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரிய மாணவர்கள் வெள்ளி முதல் அனுமதி

யாழ்ப்பாணம்

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 2005 ஆம் ஆண்டுக்கான புதிய ஆசிரியப் பயிற்சி மாணவருக்கான அனுமதிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளி காலை ஒன்பது மணிமுதல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தற்போது தற்காலிகமாக இயங்கும் திருநெல்வேலியில் நடைபெறும்.

உடற் கல்வி, கடல் வளம், கணிதம், விஞ்ஞானம், விவசாயம் போன்ற பாடநெறிகளுக்கான அனுமதிகள் நடைபெறும் எனவும், இது தொடர்பான தமது தகுதிகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை எடுத்துவருமாறு மாண்வர்களை கல்லூரி அதிபர் கு.சதாசிவ மூர்த்தி தெரிவித்துள்ளார்.

# சுனாமி வீடமைப்பு தொடர்பான கூட்டம்

யாழ்பாணம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தர வீடமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான கூட்டமொன்று நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மேற்படி பிரதேசங்களில் நிரந்த வீடமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

















# சேவை நலன் பாராட்டு விழா

சங்கானை

யாழ். மாவட்ட பிரதேச அஞ்சல் அத்தியட்சகராகக் கடமையாற்றி, ஓய்வுபெற்ற சி.சிவராசசிங்கத்திற்கு நாளை புதன்கிழமை யாழ். பிரதேச நிர்வாகக் காரியாலய ஊழியர்களாலும், சங்கானை தபாற்கந்தோர் ஊழியர்களாலும் சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது. (48)

# அவசர கலந்துரையாடல்

யாழ்பாணம்

யாழ். பல்கலைக்கழக உடற் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற வேலையற்ற டிப்ளோமா பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நீராவியடி பிறைற்மன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அவர்களுக்கான வேலைவாய்ப்பும், வடமேல்மாகாண நியமனம் தொடர்பான முக்கிய விடயம் கலந்துரையாடப்படவுள்ளது. எனவே அனைத்து வேலையற்ற டிப்ளோமா பட்டதாரிகளையும் தவறாது கலந்துகொள்ளும்படி சங்கத் தலைவர் கேட்டுக்கொள்கின்றார்.

## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். **T.P - 0779122836** நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1198)




# புற்று நோய் சிகிச்சைக்கான சேவை நேர அட்டவணை

யாழ்ப்பாணம்

புற்றுநோய் வைத்திய நிபுணர் டொக்டர் என். ஜெயக்குமாரின் சிகிச்சை விபரம் கடந்த முதலாம் திகதியிலிருந்து பின்வருமாறு நடமுறைக்கு வருவதாகவும், நோயாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளுமாறு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி வாராந்தம் பிரதி திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளையிலும், மாதாந்தம் முதலாவது புதன்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும், மாதாந்தம் இரண்டாவது புதன்கிழமை மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரியிலும், மாதாந்தம் நான்காவது புதன்கிழமை மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சியிலும், புற்றுநோய்க்கான சிகிச்சை இடம்பெறும்.

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாண சபை

**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு**
**அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)**
**நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி**
**ஆஅவ கடன் இல:- 1849 - சிறீ (எஸ்எவ்)**

# கேள்வி அறிவித்தல் - இல: 46
## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) ஆகுசெலவு சார்பாகப் பல தரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னால் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ருபா) |
|---|---|---|---|
| VA/NECORD/RD/04 | நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு வீதியை சீர்படுத்தல் (0.00 கி.மீ – 2.8 கி.மீ) | M 5 பெருந்தெருக்கள் | 192,000/= |
| AM/NECORD/RD/01 | லகுகல கிராம வீதியின் 1 வது கி.மீ இல் உள்ள லகுகல பாலம் மீளமைத்தல் | M 5 பாலங்கள் | 105,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD உடன் M 7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்தக் காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை, தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி : 026-222 7434, பக்ஸ் : 026-222 7401. இணையதள முகவரி : www.necord.org ஈமெயில் : necord@sltnet.lk)

06. கேள்வி ஆவணங்களை 04.07.2005 இலிருந்து 18.07.2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000/- ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

08. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச் சபை, "நிகொட்", 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு 25.07.2005 பி.ப. 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். இதன்பின்னர் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கமுடியும்.

09. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 18.07.2005 ஆம் திகதி அன்று பி.ப.2.00இற்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.


**த.லங்காநேசன்,**
**தலைவர், கேள்விச் சபை,**
**நீக்கோட் திட்டம்,**
55, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

(C/4260)

# உலகத் தமிழினத்தின் தலைவராக தேசியத் தலைவர் விளங்குகிறார்!

## கனடாவில் தொல். திருமாவளவன்

றொறன்ரோ—




உலகத்திலுள்ள அனைத்து தமிழ் மக்கள் மீதும் அக்கறையும், கரிசனையும் கொண்டுள்ள தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், உலகத் தமிழினத்தின் தலைவராக விளங்குகின்றார் என்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும், தமிழின உணர்வாளருமான தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

ஈழமுரசு பத்திரிகை நடத்திய இனிய மாலை 2005 நிகழ்வின் முதல் நாள் நிகழ்வில் பங்கேற்று சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது: -

தமிழீழத் தாயகத்திற்கு அண்மையில் சென்றபோது தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திக்கும் அரிய வாய்ப்புக் கிடைத்தது.

இந்தச் சந்திப்பின்போது தமிழகத்தில் சாதிய வெறி காரணமாக இரு தமிழர்களின் வாயினுள் மனித மலம் திணிக்கப்பட்ட நிகழ்வை மனவருத்தத்துடன் தெரிவித்த தேசியத் தலைவர் - இந்தக் கொடூரச் செயலைக் கேள்வியுற்ற நாளிலிருந்து மூன்று நாட்கள் தன்னால் உறங்கமுடியவில்லை எனத் தெரிவித்தார்.



தமிழகத் தலைவர்களினால் இந்தக் கொடூர நிகழ்வு ஒரு பொருட்டாகக்கூட எடுக்கப்படாத நிலையில் தனது நாட்டு மக்களின் விடியலுக்காக 24 மணி நேரமும் போராடிவரும் வேளையிலும், தமிழகத்தின் எங்கோ ஓர் மூலையில் நடைபெற்ற அந்த நிகழ்வை, ஊடகங்களால் பெரியளவில் வெளிக் கொண்டு வரப்படாத நிகழ்வைப் பற்றி அறிந்து - அந்த நிகழ்வின் கொடூரத் தன்மை காரணமாக தேசியத் தலைவர் மூன்று நாட்கள் நித்திரை கொள்ளாது தவித்தார் என்றால் அவர் எவ்வளவு தூரம் உலகத் தமிழர்கள் மீது அக்கறையையும், கரிசனையையும் கொண்டுள்ளார் என்பது வெளிப்படுகின்றது.

இதன் மூலம் அவர் உலகத் தமிழினத்தின் தலைவராக விளங்குகிறார் என தொல். திருமாவளவன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சோமாலியாவில் கடத்தப்பட்ட
# தமிழரான கப்பல் கப்டனை விடுவிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு—

சோமாலியாவில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இலங்கைத் தமிழரான கப்பல் கப்டன் மகாலிங்கம் செல்லத்துரையை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இவர் பாதுகாப்பாக இருப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இவரை விடுவிக்க கென்யா நாட்டுக்கான இலங் கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை எடுத்துச்சென்ற வேளையிலேயே இக்கப்பல் கடத்தப்பட்டது. கப்பலின் கப்டனான மகாலிங்கம் செல்லத்துரை உட்பட 9 பேர் கப்பலில் இருந்தனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் - பொரளை பிரதேசத் தைச் சேர்ந்தவராவார்.

# சிரேஷ்ட கடற்படைத் தளபதிகள் இந்த வாரம் முதல் இடமாற்றம்!

கொழும்பு—

கடற்படையின் கட்டளைப் பீடங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவின் பேரில் இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த மாத இறுதியில் அறிவிக்கப்பட்ட இந்த இடமாற்றங்களுக்கமைய சிரேஷ்ட கடற்படை அதிகாரிகள் இந்த வாரத்தில் தமது பொறுப்பை ஏற்கவுள்ளனர்.

கிழக்குப் பிராந்திய கடற்படைக் கட்டளை அதிகாரியாகவும் - திருகோணமலை பாதுகாப்பு இராணுவ இணைப்பு அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ள றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட இன்று உத்தியோகபூர்வமாகத் தமது பதவியை ஏற்கவுள்ளார்.

கடற்படைப் பிரதித் தலைமை அதிகாரியாகவும் - சேவைகள் பணிப்பாளர் நாயகமாகவும் நியமிக்கப்பட்டிருக்கும் றியர் அட்மிரல் சரத் வீரசேகர தனது பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

காலி - பூசாவை தலைமையகமாகக் கொண்ட தென்பிராந்திய கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் - றியர் அட்மிரல் உபாலி ரணவீர எதிர்வரும் 8 ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

புனாவவில் உள்ள வட மத்திய பிராந்தியக் கடற்படை பிரதித் தளபதியாக கொமாண்டர் ஆர்.டி.சிறிவர்த்தன கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றார்.

கடற்படைத் தலைமையகத்தில் பொதுச் சேவைகள் பணிப்பாளராக கொமாண்டர் டி.சமரவிக்கிரம எதிர்வரும் 8 ஆம் திகதி பதவியேற்கவுள்ளார். (தே)

## மேல்மாகாண முதல்வராக றெஜினோல்ட் குரே நியமனம்

கொழும்பு—


மேல்மாகாண சபையின் முதலமைச்சராக றெஜினோல்ட் குரே நேற்றுமுன்தினம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

மாகாண ஆளுநர் அலவி மௌலானா முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

றெஜினோல்ட் குரேக்கு ஆதரவாக இரண்டு முக்கிய கட்சிகளின் தலைவர்கள் சத்தியக் கடதாசிகளைக் கையளித்ததையடுத்து அவரை இந்தப் பதவிக்கு நியமித்ததாக ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்தார். றெஜினோல்ட் குரே பதவிப்பிரமாணம் செய்வதற்கும், ஐக்கிய தேசியக் கட்சி உட்பட மேலும் சில கட்சிகள் இணக்கம் தெரிவித்தன.

றெஜினோல்ட் குரே முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்த பின்னர் - பிரசன்ன ரணதுங்க , காமினி திலகசிறி, ஹெக்டர் வெப்கே, திலிப் விஜேசேகர ஆகியோர் மாகாண அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

## சந்திரிகாவுடன் பேசக்கூடாது!



கொழும்பு—

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது கட்சியின் அங்கத்தவர்கள் - கட்சியின் அனுமதியின்றி எந்தவொரு காரணத்துக்காகவும் ஜனாதிபதி சந்திரிகாவுடன் கலந்துரையாடல் நடத்தக்கூடாதென அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

ஐ.தே.கட்சியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக வெளிவந்த தகவலை அடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (தே)

## கைக்குண்டுகளுடன் இளைஞன் கைது!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - சித்தாண்டியில் கைக்குண்டுகளுடன் சென்றதாகக் கூறி படையினரால் இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். சித்தாண்டியைச் சேர்ந்த தவராசா (வயது 26) என்ற இளைஞரே மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது கைதுசெய்யப்பட்டார்.

இவரிடமிருந்து இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுக்கட்டமைப்பு உடன்பாடு; ஐ.நா பிரகடனத்துக்கு விரோதம்!

## இப்படிச் சொல்கிறது ஜே.வி.பி.

கொழும்பு—

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திட்டதன் மூலம் - ஐ.நா. பிரகடனத்தை அரசாங்கம் மீறியிருப்பதாக ஜே.வி.பி. குற்றம்சாட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சுனாமி நிவாரணசபை சம்பந்தமான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி வழங்குவதை தடைசெய்யும் சர்வதேச பிரகடனம் மீறப்பட்டுள்ளது.

அதனால் அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையிடவுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு நடவடிக்கைகள் தொடர்பான ஜே.வி.பியின் குழு இந்த முறைப்பாடு சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.



இந்த வாரத்துக்குள் இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்படும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்
# ஜனாதிபதி வேட்பாளர் பெயரை பிரேரிப்பதை தவிர்க்க அறிவுறுத்தல்



கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை அல்லது வேறு எவருடைய பெயரையோ பிரேரிக்க வேண்டாமென சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதேச மற்றும் இணைந்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகாவின் இந்த முடிவு கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதி பதவியிலிருக்கும் போது புதிய ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்வது கட்சிக்குள் அபிப்பிராய பேதங்களை உருவாக்கலாமென கருதி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு முக்கிய தேசிய பிரச்சினையை தீர்க்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலகியுள்ளது.

இதனால் அரசாங்கம் ஸ்திரமற்ற நிலைக்குச் சென்றுள்ளது.

இந்த நேரத்தில் அரசாங்கத்தை பாதுகாப்பதற்குப் பதிலாக அரசை நெருக்கடிக்குள் தள்ளும் நிலை இந்த ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் நிலையினாலேயே ஏற்பட்டுள்ளது.

எனவே, ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் தீர்மானம் தற்போதைய சூழ்நிலையில் உகந்த செயற்பாடாக இருக்க மாட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

கட்சியால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி தற்போது பதவியிலிருந்து தேசிய பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொண்டுள்ள தருணத்தில் இதுபோன்ற அனாவசிய செயற்பாடுகளினால் கட்சியை அவமானப்படுத்துவது அவருக்கு செய்யும் கௌரவக்குறைவெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# மாகாணமட்ட உதைபந்தாட்டம் யாழ்.மாவட்ட அணி சம்பியன்!





யாழ்ப்பாணம் —

வடக்கு-கிழக்கு விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த 2ஆம் திகதி முதல் நேற்றுவரை யாழ்.பொது விளையாட்டரங்கில் நடைபெற்றன.

நேற்று மாலை 4 மணிக்கு நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி 2:1 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட அணியைத் தோற்கடித்து இந்த ஆண்டுக்கான சம்பியனானது.

ஆட்டம் தொடங்கியதும் இரு அணி வீரர்களும் மிகவும் விறுவிறுப்பாக ஆடினர். ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் யாழ்.மாவட்ட அணி ஒரு கோலைப் போட்டதும் ஆட்டம் மேலும் விறுவிறுப்பானபோது, மன்னார் மாவட்ட அணி ஆட்டத்தின் 24ஆவது நிமிடத்தில் ஒருகோலைப் போட்டதும் இரு அணி வீரர்களும் மேலும் கோலைப் பெறுவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டனர். இருந்தபோதிலும் முதற் பாதி ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமனிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டம் தொடங்கியதும் இரு அணி வீரர்களும் கோல்களைப் பெறுவதற்கு முயற்சித்தனர்.

இரு அணியினருக்கும் கோல் அடிப்பதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதிலும், அவர்கள் அந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. இந்த வேளையில், ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் யாழ்.மாவட்ட அணியினர் மீண்டும் ஒருகோலைப் போட்டு வெற்றியினை உறுதிப்படுத்திக் கொண்டனர். இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் யாழ்.மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை வெற்றி கொண்டது.

அரையிறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணி, திருகோணமலை மாவட்ட அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. இன்னொரு அரையிறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணி, மட்டக்களப்பு மாவட்ட அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றுக்காலை 9 மணிக்கு நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட அணி மோதியது. இதில் திருகோணமலை மாவட்ட அணி 4:2 என்ற கோல் கணக்கில் மட்டக்களப்பு மாவட்ட அணியைத் தோற்கடித்து மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

## உதைபந்தாட்டப் போட்டி!

தமிழீழ விளையாட்டுத்துறை வலிகாம உதைபந்தாட்ட லீக் ஆதரவில் நமது ஈழநாடு ஊடக அனுசரணையுடன் சுனாமியால் உயிரிழந்த மாதகல் வாழ் பொது மக்களின் ஞாபகார்த்தமாக சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையில் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் - .

இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் பி அணியை எதிர்த்து இளம் தென்றல் அணியும் மோதவுள்ளன.

# விம்பிள்டன் கிண்ணத்தை வென்றார் ரோஜர் பெடரர்!

லண்டன் —

விம்பிள்டன் ரெனிஸ் போட்டியில் ஆண்கள் பிரிவில் ரோஜர் பெடரர் 3ஆவது தடவையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.



நேற்றுமுன்தினம் ஆண்கள் பிரிவு ஒற்றையர் இறுதி போட்டி நடைபெற்றது. இதில் உலகின் முதல்நிலை வீரரான ரோஜர் பெடரும் (சுவிற்சர்லாந்து), உலகின் இரண்டாம் நிலை வீரரான அன்டி ரொடிக்கும் (அமெரிக்கா) மோதினர்.

23 வயது இளம் வீரரான பெடரர் ஏற்கனவே 2003, 2004 ஆகிய இரு ஆண்டுகளும் விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்றவர் ஆவார். எப்படியாவது இந்தப் போட்டியிலும் வென்று 3ஆவது முறை சம்பியனாகிவிடவேண்டும், ஹட்ரிக் அடித்துவிடவேண்டுமென்ற ஆவேசத்தோடு விளையாடினார்.

இவர் 6-2, 7-6 (7-2), 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார். 3 தடவைகள் தொடர்ந்து சம்பியன் பட்டத்தை வென்று விம்பிள்டனில் ஹட்ரிக் அடித்து விட்டார்.

ஏற்கனவே இதுபோல பீட் சாம்ராஸ், பிஜான் போர்க் ஆகிய இரு வீரர்கள் விம்பிள்டனில் ஹட்ரிக் சம்பியனாகியுள்ளனர். 3ஆவது ஆளாக இந்தச் சாதனைப் பட்டியலில் பெடரர் சேர்ந்துள்ளார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் மகேஷ் பூபதி ஜோடி சம்பியனானது. விம்பிள்டன் கலப்பு இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் இந்திய வீரர் மகேஷ் பூபதி ஜோடி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. அவரும், மேரி பியர்ஸும் (பிரான்ஸ்) ஜோடியாக விளையாடினார்கள். அவர்கள் 7-5, 6-1 என்ற செட் கணக்கில் ஜோனாஸ் போர்க் மேன் (சுவீடன்) - லிசா (அமெரிக்கா) ஜோடியை அரையிறுதி ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலையில் வென்றார்கள்.

பின்னர் நேற்றுமுன்தினம் இரவு இறுதிப் போட்டியில் பால்ஹான்லே (அவுஸ்ரேலியா)-தாதியானா (உக்ரைன்) ஜோடியுடன் மகேஷ் பூபதி ஜோடி மோதியது. அதிலும் மகேஷ் பூபதி ஜோடி வெற்றிபெற்று சம்பியனானது (6-4, 6-2).

## விளையாட்டு

## மாதகல் சென்.தோமஸ் உதைபந்தாட்டம்

# சென்.சேவியர் உதயசூரியன் அணிகள் நேற்றைய போட்டிகளில் வெற்றிபெற்றன!

மாதகல் —

மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டுவருகின்ற 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் 9ஆம் நாளாகிய நேற்று நடைபெற்ற போட்டிகளில் சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும், உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டின.

நேற்றுமாலை 4.30 மணிக்கு ஆரம்பமான சென்.சேவியர் அணிக்கும், அராலி ஜேம்ஸ் அணிக்குமிடையிலான ஆட்டம் ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இருந்தபோதிலும், சென்.சேவியர் அணியின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது.

ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் அந்த அணியின் வீரர் சுதர்சன் முதலாவது கோலைப் போட்டார். இரண்டாவது கோல் அந்த அணியின் வீரர் டேமியனால் ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் போடப்பட்டது.



இதனையடுத்து தமது ஆட்டத்தின் போக்கை மாற்றிய ஜேம்ஸ் கழகத்தினர் தமது முதலாவது கோலை ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் போட்டனர். ஆயினும் 27ஆம், 29ஆம், 39ஆம் நிமிடங்களில் சென்.சேவியர் அணியினர் மேலும் மூன்று கோல்களைப் போட்டதன் மூலம் அந்த அணியின் கோல்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்தது. இந்தக் கோல்களை முறையே யுத்தின், டேமியன், ஜெயரட்ணம் ஆகியோர் போட்டனர். இதனால் 5:1 என்ற கோல் கணக்கில் சென்.சேவியர் அணி வெற்றியீட்டியது.

இன்னொரு போட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகத்துக்கும், மனோகரா விளையாட்டுக் கழகத்துக்குமிடையெ நடைபெறவிருந்தபோதிலும், மனோகரா அணி சமுகமளிக்காத காரணத்தால் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது.

## தாச்சி போட்டி

கோண்டாவில் —

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம், விளையாட்டுத்துறை ஆதரவில் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி .விளையாட்டுக் கழகம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

# உலக இளைஞர்கள் உதைபந்தாட்டம்: ஆர்ஜென்ரீனா மீண்டும் சம்பியனானது!



உட்ரெக்ட் —

உலக இளைஞர் உதைபந்தாட்டத் தொடரில் ஆர்ஜென்ரீனா, நைஜீரியாவை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நெதர்லாந்தில் உள்ள உட்ரெக்ட் நகரில் 20 வயதுக்குட்பட்டோருக்குக்கான உலகக் கிண்ண உதைபந்து தொடர் நடைபெற்றது. இதில் விறுவிறுப்பான இறுதிப் போட்டி பலமிக்க ஆர்ஜென்ரீனா, நைஜீரியாவை எதிர்த்து விளையாடியது.

முதல் பாதி முழுவதும் ஆர்ஜென்ரீனாவின் ஆதிக்கமே காணப்பட்டது. இந்த அணியின் இளம் நட்சத்திர வீரரான லியோனல் மெஸ்சி 39ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பு மூலம் முதல் கோல் அடித்தார். இதற்கு 53ஆவது நிமிடத்தில் நைஜீரியா பதிலடி கொடுத்தது.

இந்த அணியின் சினெடு ஒக்புகே அபாரமான கோல் அடித்தார். இதன்பின் இரு அணிகளும் தாக்குதல் ஆட்டத்துக்கு மாறின. 75ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீன அணியின் மெஸ்சி மீண்டும் பனாட்டி வாய்ப்பு பெற்றார்.

இந்த முறையும் இவர் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள ஆர்ஜென்ரீனா 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றதன் மூலம் ஆர்ஜென்ரீனா 5ஆவது தடவையாக சம்பியனானது.

## அஸ்ரா கிண்ண கிரிக்கெட்

# யாழ்.இந்து - மகாஜன இடையிலான ஆட்டம் சமனிலையில் முடிவுற்றது!

மல்லாகம் —

அஸ்ரா கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரிக்கும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டம் சமனிலையில் முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செந்தூரன் 23, சதுர்சன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்துக் கல்லூரி சார்பாக அமரன் 9.3 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை எடுத்தார். டிலான் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரி 6 விக்கெட் இழப்புக்கு 228 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கௌரிநாத் 66, சுதாகரன் 53, சுரேஷ்குமார் 39, நிரோகிதன் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனக் கல்லூரி சார்பாக கஜதீபன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 4 விக்கெட் இழப்புக்கு 90 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜபாகர் 37 ஓட்டங்களைப் பெற்றார். இந்துக் கல்லூரி சார்பாக அமரன் 24 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதனால் இந்த ஆட்டம் சமனிலையில் முடிவுற்றது.

இதேவேளை, யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும், மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற இன்னொரு போட்டியில் மகாஜன அணி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மகாஜனக் கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 6 விக்கெட் இழப்புக்கு 229 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் அமிராஜன் 7 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 84 ஓட்டங்களையும், புவிதரன் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சருவன் 59, சுதர்சன் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

மகாஜனக் கல்லூரி சார்பாக கஜதீபன் 4 விக்கெட்டுக்களைக் கைபற்றினார். கனகரத்தினம் மகாவித்தியாலயம் சார்பாக கிருஷ்ணா 4 விக்கெட்டுக்களைக் கைபற்றினார்.

பலோ ஒன் காரணமாக மீண்டும் கனகரத்தினம் மகாவித்தியாலயம் துடுப்பெடுத்தாடியது.

இரண்டாவது இனிங்ஸில் கனகரத்தினம் மகாவித்தியாலயம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 92 ஓட்டங்களையே பெற்றது. இதில் சுதர்சன் 27 ஓட்டங்களையும், சுரேசன் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனக் கல்லூரி சார்பாக கஜதீபன் 8.3 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனால் மகாஜனக் கல்லூரி அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 12 ஓட்டங்களால் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை வெற்றிகொண்டது. (72)

# நவாலி படுகொலை நினைவாக 9ஆம் திகதி விசேட நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம் ——

நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயம் மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட 147 பேரின் 10 ஆம் ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

நவாலி சென். பீற்றர்ஸ் ஆலய பங்குத்தந்தை வண. பிதா நேசராஜா தலைமையில் எதிர்வரும் 9ஆம் திகதி மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் - யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், நீதிக்கும், சமாதானத்துக்குமான ஆணைக் குழுத் தலைவர் ஏ.ஐ.பேர்ணாட், எச்.எஸ்.சி. எம்.எவ்.தலைவரும், வலி. தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளருமான செல்வராஜா ரமேஸ், நவாலி முருகமூர்த்தி ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சோ.கௌரீஸ்வரக் குருக்கள், தென்னிந்தியத் திருச்சபை வண. பிதா ஏ.எஸ். தேவகுணானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

அன்று மாலை 5 மணிக்கு சென். பீற்றர்ஸ் படுகொலையின் 10 ஆம் ஆண்டினை நினைவு கூரும் மலர் வளையம் பான்ட் இசையுடன், சென். பீற்றர்ஸ் நூலகத்திலிருந்து எடுத்து வரப்படும்.

பின்னர் மலர்வளையம் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு 10 ஆம் ஆண்டை நினைவுகூரும் வகையில் 10 பாரிய விளக்குகள் எரியவைக்கப்படும்.

அதனை தொடர்ந்து சிறப்புரை இடம்பெறுவதுடன், நவாலியூர் நாயகி திருமதி எம்.மரியதாஸினால், கொல்லப்பட்டவர்களின் ஞாபகார்த்த இசை நிகழ்த்தப்படும்.

தொடர்ந்து நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயத்திலுள்ள நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

கொல்லப்பட்ட 147 பேரின் படங்கள் நவாலி சென்பீற்றர்ஸ் ஆலயத்தில் வைத்து வழிபாடு நடத்தப்படவுள்ளது.

எனவே, கொல்லப்பட்டவர்களின் உறவினர், நண்பர்கள் படங்களை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயத்துக்கு அருகிலுள்ள 'அமுதசுரபி' எனும் ஜெயக்குமாரிடம் ஒப்படைக்குமாறு ஆலய நிர்வாக செயலாளர் பொனிபஸ் இம்மானுவேல் கேட்டுள்ளார்.

(100)

## சுனாமியால் வீடுகளை இழந்தோருக்கென 5 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை கியூடெக் நிறுவனம் அமைக்கவுள்ளது!

யாழ்ப்பாணம் ——

கியூடெக் நிறுவனம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ். மாவட்டங்களில் சுனாமியால் வீடுகளை இழந்த 1050 குடும்பங்களுக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது என கியூடெக் நிறுவன அதிகாரி தெரிவித்தார்.

கியூடெக் நிறுவனம் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டவுடன் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ததுடன், முல்லைத்தீவில் 135 தற்காலிக வீடுகளையும், மருதங்கேணியில் 265 தற்காலிக வீடுகளையும், பருத்தித்துறையில் 336 தற்காலிக வீடுகளையும் அமைத்துக்கொடுத்தது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் 740 நிரந்தர வீடுகளும், வட்மராட்சி கிழக்குப் பகுதியில் 150 நிரந்தர வீடுகளும், பருத்தித்துறைப் பகுதியில் 160 நிரந்தர வீடுகளும் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இந்த வீடுகள் மலசலகூட வசதி, இரண்டு அறை, ஒரு சமையலறை, ஓட்டினால் வேயப்பட்ட கூரை என்பவற்றைக் கொண்டமைந்ததாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## குறுந்திரைப்படப் போட்டிக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

மானிப்பாய் ——

பாடசாலை மாணவர்கள் மற்றும் மாணவர்கள் அல்லாதோர் ஆகியோருக்கான தொலைக்காட்சி குறுந்திரைப்படப் போட்டியொன்று இலங்கை சுற்றுப்புறச் சூழல் திட்டத்தின் கீழ் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கைச் சூழல், சமூகம், அபிவிருத்தி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கருப்பொருளாக முன்னிறுத்தி இந்தக் குறுந்திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

மேலும், இந்தக் குறுந்திரைப்படங்கள் இதற்கு முன்னர் எந்தவொரு தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டிருத்தல் கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கார்ட்டூன், மப்பட், பொம்மலாட்டம் அல்லது நேரடிக் காட்சிகள் ஆகியவற்றின் ஊடாகப் படைப்பாளர்கள் தமது கதாபாத்திரங்களை சிருஷ்டிக்க முடியும்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய எந்தவொரு மொழியிலும் மேற்படி தொலைக்காட்சிக் குறுந்திரைப்படங்களைத் தயாரிக்கலாம்.

ஆனால் தமிழ் ஆங்கில மொழியிலான படைப்புகளின் ஆக்கப் பிரதிகள் சிங்கள மொழியிலும் வழங்கப்படல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தக் குறுந்திரைப்படங்களை V.C.D, V.H.F, D.V.D ஆகியவற்றில் பதிவு செய்து அனுப்பிவைக்கமுடியும்.

பாடசாலை மாணவர்கள் தமது படைப்புகளை அதன் பாடசாலை அதிபர் உறுதிசெய்து கையொப்பம் இடப்படல் வேண்டும்.

போட்டியாளர்கள் தமது படைப்புகளை தொலைக்காட்சி குறுந்திரைப்படம், இலக்கம் 18/1, பிரதான வீதி, பத்தரமுல்ல. என்ற முகவரிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

(100)

## திருவடிநிலை கடலில் மீன்பிடிக்க இரு வாரங்களுக்குள் அனுமதி

யாழ்ப்பாணம் ——

சுழிபுரம் - திருவடிநிலைக் கடலில் மீன்பிடிக்க கடற்தொழிலாளர்கள் 16 பேருக்கு கடற்படையினர் அனுமதிப்பத்திரம் வழங்க மறுத்தமை குறித்து ஆணைக்குழு அதிகாரிகள் சுழிபுரம் கடற்படை அதிகாரிகளிடம் விசாரணை மேற்கொண்டனர்.

இதன்போது, அனுமதி மறுக்கப்பட்ட 16 கடற்தொழிலாளர்களுக்கும் இரண்டு வாரங்களுக்குள் அனுமதிப்பத்திரம் வழங்குவதாக சுழிபுரம் கடற்படை அதிகாரி மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரியிடம் உறுதியளித்துள்ளார்.

இந்தக் கடலில் மீன்பிடித் தொழில் மேற்கொள்ளும் 16 கடற்தொழிலாளர்களும் தமக்கு மீன்பிடி அனுமதிப்பத்திரம் வழங்க மறுத்தமை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கெங்காதேவி கடற்தொழில் கூட்டுறவு சங்கம் ஊடாக முறையிட்டமை குறிப்பிடத்தக்கது.

## கவிஞர் அன்ரன் செல்வகுமாரின் நான்கு நூல்கள் அறிமுக விழா!

யாழ்ப்பாணம் ——

எழுத்தாளரும், நாடக நடிகருமான கவிஞர் அன்ரன் செல்வக்குமாரின் நான்கு நூல்களின் அறிமுகவிழா - எதிர்வரும் 13 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பொது மண்டபத்தில் கல்லூரி அதிபர் அதி. வண. பிதா. ஜேம்ஸ் சிங்கராயர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

'அந்தரிக்கும் ஆன்மா', 'வானத்துப்பெண் ஏன் கண்ணீர் வடிக்கின்றாள்', 'சுனாமியே உனக்கு கருணையே கிடையாதா' ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகளும், 'குமாரத்தி' எனும் சிறுகதைத் தொகுதியும் அறிமுகஞ்செய்து வைக்கப்படவுள்ளன.

இந்த அறிமுக விழாவின் பிரதம அதிதிகளாக யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர் கலாநிதி அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இந்த நான்கு நூல் தொகுதிகளும் கடந்த மே 15 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

(113)

## கிராம அலுவலர்களை தரமுயர்த்துவதற்கான பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

மானிப்பாய் ——

கிராமசேவை அலுவலர்களைத் தரமுயர்த்துவதற்கான பரீட்சைக்கு பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திஸநாயக்க விண்ணப்பங்களைக் கோரியுள்ளார்.

இதன்படி - தரம் II கிராம அலுவலர்கள் திறமையின் அடிப்படையில் தரம் I இற்குப் பதவி உயர்த்துவதற்கான பரீட்சைக்கும், திறமையின் அடிப்படையின் பேரில் கிராம அலுவலர் அதியுயர் தரத்துக்கும் பதவி உயர்த்துவதற்கான பரீட்சைக்கும், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பேரில் கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவி உயர்த்துவதற்கான பரீட்சைக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியுடைய கிராம அலுவலர்கள் - தமது விண்ணப்பங்களைத் தாம் சேவையாற்றுகின்ற பிரிவுக்குரிய பிரதேச செயலர் ஊடாக 'பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி (08.08. 2005) ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பும்படியும்,

அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'திறமை அடிப்படையில் கிராம அலுவலர் அதியுயர் தரத்துக்கு தரம் உயர்த்தும் போட்டிப் பரீட்சை - 2005' எனக் குறிப்பிடல் வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முழு விபரங்களையும் கடந்த 01.07.2005 ஆம் திகதியில் வெளிவந்த அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

(100, 44)

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு அடுத்தவாரம் நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம் ——

ஆசிரிய பட்டதாரி பயிலுனர்களுக்கான நேர்முகத் தேர்வு யாழ்ப்பாண மாவட்டத்தில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளதாக பிராந்திய ஆணையாளர் திருமதி பி.சிவலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பட்டதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு பெரும்பாலும் யாழ்.கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

இதேவேளை, கடந்த மாதம் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை நியமனங்களுக்காக யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட பட்டதாரிகள் நேர்முகத் தேர்வில் 2525 பேர் கலந்து கொண்டனர்.

இந்த நேர்முகத்தேர்வுக்கு மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 2928 ஆகும். 403 பேர் இந்த நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ளவில்லை எனவும் பிராந்திய ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## ஜி.ரி.இசற் நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம்




யாழ்ப்பாணம் ——

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ், திருமலை மாவட்ட தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன், யாழ். பல்கலைக்கழக புறநிலைப் பட்டப்படிப்பு அலகு இணைப்பாளர் வேதநாதன் ஆகியோர் உட்பட பலர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். தொடர்ந்து ஜி.ரி. இசற்றின் பாதிக்கப்பட்ட பிரதேச பிள்ளைகளுக்கான செயற்திட்ட 4 ஆவது பிரிவு கற்கைநெறியில் சித்தியடைந்த 35 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## கோவில் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம் ——

யாழ். கோவில் வீதி புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.


யாழ்.பிரதான வீதியிலிருந்து ஆஸ்பத்திரி சந்தி வரையான கோவில் வீதி மாநகரசபையால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நீண்ட நாட்களாக குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதிப் பகுதிகள் கற்கள் நிரப்பப்பட்டு, தார் ஊற்றி புனரமைக்கப்பட்டு வருகின்றன.






# திமிங்கல வேட்டைக்கு ஜப்பானுக்குக் கண்டனம்




விஞ்ஞானம் என்ற பெயரில் அதிகளவில் திமிங்கலங்களை வேட்டையாடிவரும் ஜப்பானின் நடவடிக்கையைச் சர்வதேச திமிங்கலவேட்டைத் தடுப்பு ஆணைக் குழு (INC) கண்டித்துள்ளது.

ஜப்பானிய ஆய்வுக் கப்பல்கள் எனக் கூறப்படும் கப்பல்களால் வருடாந்தம் ஆயிரம் திமிங்கலங்கள் அந்தார்ட்டிக் கடல் பகுதியில் வேட்டையாடப்படுவதாக ஆணைக்குழு தனது வருடாந்த மாநாட் டில் சுட்டிக் காட்டியுள்ளது. Minkes, Sperm whale போன்ற அரிய திமிங்கல வகைகள் இதனால் அழிவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஜப்பானிய உணவகங்களில் அதிகம் விரும்பப்படும் விலை அதிகமான ஓர் சுவையுணவாகத் திமிங்கல இறைச்சி விற்பனையாவது குறிப்பிடத்தக்கது.

# விறைப்பு அபாயம்




குறைந்த அளவில் வரும் விறைப்புத் தன்மை நாளடைவில் பெரியளவில் உடலைத் தாக்கலாம். இதைக் கண்டறியச் சில முறைகளைக் கையாளலாம் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வுக்குழு ஒன்று இது குறித்து அறிவித்துள்ளது.

நோயாளியின் வயது, இரத்த அழுத்தம், நோய் அறிகுறிகள், தாக்கப்படும் நேரம் என்பவற்றை ஒருவாரத்துக்கு அவதானித்து, நோயின் தன்மையைக் கண்டறியலாம் என அவர்கள் கூறுகின்றனர்.

சிறிய தாக்குதலுக்குள்ளானவருக்குப் பெரியளவில் விறைப்புத் தன்மை ஒரு வாரத்தில் ஏற்படும் என்பது ஆய்வுக்குட்பட்டவர்களில் 10 சதவீதத்தினர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.






# பயணம் ஒத்திவைப்பு

மே மாதத்தில் புறப்படவிருந்த அமெரிக்காவின் கொலம்பிய விண்கலத்தின் பயணம் - இந்த மாதத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. விண்கலத்தின் வெப்பத்தடுப்பு தகட்டில் குளிர்ந்த பொருட்கள் ஏதும் மோதினால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து, மேலும் சில ஆய்வுகள் செய்ய வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


2003 ஆம் ஆண்டில் கொலம்பிய விண்கல விபத்தின் பின்னர், நாஸா விண்கலங்களை அனுப்புவதில் மிகுந்த கவனம் எடுத்து வருகிறது. ஒவ்வொரு பகுதியும் நன்கு ஆராயப்பட்ட பின்னரே பயணத்துக்கு அனுமதிக்கப்படும் என நாஸா அதிகாரிகள் கூறுகின்றனர்.

# புதிய அதிவிரைவு ரயில்




உலகின் அதிவேக ரயில் வண்டியான சில்வர் புல்லட் (Silver Bullet) ஐ 1964 இல் உருவாக்கிய ஜப்பான், தற்போது புதியவகை ரயில் வண்டி ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த ரயில் வண்டியின் மேல் புறத்தில் செவி போன்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது அவசரகாலத்தின் போது, வண்டியை உடனடியாக நிறுத்தும். காற்று மூலம் செயற்படும் பிரேக்குகளாகும். (Air Brake) இந்தப் புகைவண்டி மணிக்கு 360 கீ.மீ வேகத்தில் செல்லும். நில அதிர்வு அச்சுறுத்தல் ஏதும் ஏற்பட்டால், வண்டியின் மேல் உள்ள செவி போன்ற பிரேக்குகள் உடனடியாகச் செயற்பட்டு, வண்டியின் நகர்வை நிறுத்தும். இந்த வண்டி 2011 இல் பொதுப்பாவனைக்காக வரும்.

# போலி சிடிக்கள்



விடியோ, ஓடியோ ஒரிஜினல் சிடிக்கள் சந்தைக்கு வரமுன்னரே, போலி சிடிக்கள் சந்தையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய 1.2 மில்லியன் போலி சிடிக்கள் உலகளாவிய ரீதியில், 2004 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதன்படி ஏறக்குறைய 2.5 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள்வரை போலி சிடிக்கள் 2004 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டு வந்தமை கண்டறியப்பட்டுள்ளது. பிரேசில், சீனா மற்றும் இந்தியா ஆகிய 3 நாடுகளுமே மிகவும் உன்னதமான போலி சிடிக்களை வெளியிடும் நாடுகளாக உலக சந்தையில் முதலிடம் வகிக்கின்றன. சர்வதேச அளவில் இதனை எவ்வாறு தடுப்பது என்பது பற்றிப் பல முயற்சிகள் நடைபெற்றாலும், இவற்றினுடைய போலி விற்பனை வருடா வருடம் பன்மடங்காகப் பெருகியிருப்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. சில மியூசிக் கம்பனிகளும் போலி விற்பனையை ஊக்குவிப்பதால், இதனைத் தடுப்பது மிகவும் சிரமமாகவேயுள்ளது.

# வண்டைத் தேடி



வெப்பகாலங்களில் பழ மரங்களில் காணப்படும் ஓர் அரிய வகை வண்டை எவராவது கண்டால் அறிவிக்கும்படி, பிரிட்டிஷ் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். Noble chafer எனப்படும் வெள்ளி கலந்த பச்சை நிறமான இந்த வண்டு, இப்போது அருகி வருவதால் அதைக் கண்டு பிடிப்பது கடினமாகியுள்ளதாக அழிவுறும் பிராணிகள் பாதுகாப்பு மக்கள் நம்பிக்கை நிதியத்தினர் தெரிவிக்கின்றனர்.



Gnorimus nobills வகையைச் சேர்ந்த இந்த வண்டு முதிய மரங்களினுள் பொந்துகளில் காணப்படும். ஜூலை முதல் ஓகஸ்ட் மாத காலப்பகுதியிலேயே இவற்றின் நடமாட்டத்தைக் காணமுடியும் எனக் கூறப்படுகிறது.

# புலிகள் பாதுகாப்பு



ஆசிய நாடுகளில் வரிப் புலிகள் அதிகம் காணப்படுகின்ற இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில், திடீரென அவற்றின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கடும் பாதுகாப்புடன் ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்த இடத்தில், கடந்த இரண்டு வருடங்களில் 10 புலிகள் வரை பிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போது இத்தகைய பிரதேசங்களில் ஏறக்குறைய 3 ஆயிரத்து 500 புலிகள்வரை இருக்கலாம் எனவும் மிருக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இந்திய அரசிடம் இதுபற்றி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இதன் காரணமாக காட்டிலாகா அதிகாரிகள் மற்றும் பொலிஸாரிடம் எல்லாம் சி.பி.ஐ விசாரணை முடுக்கிவிடப்பட்டுள்ளது. இதன்போது சி.பி.ஐயுடைய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதிலிருந்து காட்டிலாகா வினருக்கு நவீன ஆயுதங்கள் மற்றும் பயிற்சிகளைக் கொடுத்து, புலிகளைப் பிடிப்பவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற பரிந்துரை காணப்படுகிறது.

# திரை விமர்சனம்



## பதவி படுத்தும் பாடு

சந்தனக் கடத்தல் வீரப்பனை மக்கள் மறந்துவிடக் கூடாது என்பதற்காக வந்துள்ள படம் தான் இது.

காட்டிலிருக்கும் கொள்ளையரான ரஞ்சித் முன்னாள் முதல்வர் - ரவிச்சந்திரனைக் கடத்திக் கொண்டு கட்டாயப்படுத்துகிறார். ஆனால், தற்போதைய முதல்வர் பிரமிட் நடராஜன் இவரை மீட்க எந்த நட வடிக்கையும் எடுக்க வில்லை. இதன் கார ணமாக ரவிச்சந்திரன் கட்சியினர் நாடு முழுவதும் ரகளை யில் ஈடுபட்டு, பிரமிட்டுடைய ஆட்சியைக் கலைக்க வைக்கின்றனர்.

பின்பு ரஞ்சித்துக்குப் பொது மன்னிப்புக் கிடைத்து, அவர் அரசியலில் ஈடுபட்டு முதல்வராகின்றார். ஒரு கட்டத்தில் அவர் ரவிச்சந்திரனைக் கடத்தியது வெறுமே நாடகம் என்கின்றார்.

அவர் முதல்வராகி, எப்படி அரசியல்வாதிகளின் ஊழல்களை அம்பலப்படுத்துகின்றார் என்பதுதான் மீதிக்கதை.

காட்டுக் கொள்ளையராக பெரிய மீசையுடன் வருகிறார் ரஞ்சித்.

அவர் காதலியாகவும், மனைவியாகவும் வருகிறார் அனாமிகா. அரசியல் தலைவராக வருகிறார் மணிவண்ணன். அதிரடி அரசியல் வசனங்களைப் பொழிந்து தள்ளுகிறார் இயக்குநர் சி.ராமலிங்கன். எடுத்தகதை சரி. ஆனால், இசை, ஒளிப்பதிவு மற்றும் இயக்கம் ஆகியன நன்கு அமையவில்லை. சத்யாவின் அரசியல் வசனங்கள் படத்தைக் கொண்டு செல்கின்றன. பழைய கதையாக இருந்தாலும், அரசியல் நெருக்கடி கூடிய படமாக இருப்பது படத்தை ஓரளவு கொண்டு செல்கிறது.

– அபர்ணா–

# சொந்தமாக மின்!

வீடுகளில் காற்றாடிகள் மூலம் அல்லது சூரியசக்தி மூலம் சொந்தமாக மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றை அமுல் செய்வது குறித்து, பிரிட்டிஷ் அரசு ஆலோசித்து வருகிறது.




மைக்ரோ ஜெனரேஷன் என்ற இந்தத் திட்டம் மூலம் வீடுகள் மட்டுமல்ல வர்த்தக மற்றும் பொது அமைப்புகளும் நன்மையடையலாம் என இந்தத் திட்டம் குறித்து வெளியிட்ட மின் சக்தித்துறை அமைச்சர் மல்கொம் விக்ஸ் கூறியுள்ளார். இதன் மூலம் மின் உற்பத்திக்காக அரசு செலவிடும் பெருமளவு பணத்தை மிச்சப்படுத்த முடியும் எனக் கூறப்படுகிறது.

# உயிர் கொல்லும் மலேரியா



எயிட்ஸ் நோய்க்குக் கொடுக்கப்படும் மருந்துகள் மிகவும் கடுமையானவையாகவும், அத்துடன் சில நோய்க் காரணிகளை மறைக்கக்கூடியனவாகவும் உள்ளன. அண்மையில் அவுஸ்ரேலியாவின் குயின்லாந்துப் பல்கலைக்கழக ஆய்வாளர்களுடைய கூற்றுப்படி, மலேரியா நோயை இந்த எயிட்ஸ் மருந்துகள் வெளிக்காட்டாமல் செய்துவிடுகின்றன. உண்மையில் மலேரியா நோயால் உலகளாவிய ரீதியில் ஒரு மில்லியன் மக்கள்வரை இறக்கிறார்கள். 90 வீதத்துக்கும் அதிகமான மக்கள், ஆபிரிக்க நாடுகளிலேயே இந்த நோயால் இறக்கிறார்கள். மலேரியாவால் இறக்கின்ற நோயாளிகள் பலருக்கு எச்.ஐ.வி நோய் இருப்பதாகக் கூறப்படுகிறது. எய்ட்ஸ் நோயாளிக்கு மலேரியா நோய் வருகின்றபொழுது, அவர்களுடைய மலேரியா இரட்டிப்பாகிறது. அங்கே காணப்படுகின்ற வைரஸினுடைய எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதாகக் கூறப்படுகிறது. மலேரியா நோயாளிகள் கட்டாயம் கவனிக்கப்படவேண்டும் என்பது ஆய்வாளர்களின் கூற்று.


# திமிங்கல வேட்டை



சர்வதேச அளவில் திமிங்கலங்கள் கொல்வதைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு கூட்டம் தற்போது நடைபெற்று முடிந்திருக்கிறது. இந்தக் கூட்டத்தில் வைத்து விஞ்ஞான ரீதியாக திமிங்கலங்களை வேட்டையாடுவது சரி என்று கூறும் பலதிட்டங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. விஞ்ஞான ரீதியாகத் திமிங்கலங்களை வேட்டையாடுவது சரி என்ற கூற்றை ஜப்பான் மறுதலித்திருக்கிறது. ஜப்பான், நேர்வே, ஐஸ்லாந்து, கிறீன்லாந்து, அலஸ்கா மற்றும் கிழக்கு சைபீரியா ஆகிய பிரதேசங்களிலேயே அதிகமாக திமிங்கலங்கள் பிடிக் கப்பட்டு வருகின்றன. ஆனாலும், மற்றைய நாடுகளை விட ஜப்பானே மிகவும் கூடுதலாக இந்தத் திமிங்கல வேட்டைத் திட்டத்தினை எதிர்க்கிறது. ஏனெனில் ஜப்பானில் காணப்படும் திமிங்கலங்கள் மிகவும் அதிசய இனங்களாகவும், அத்துடன் பாரிய அளவிலும் உள்ளன. 1980 ஆம் ஆண்டிலிருந்து உலகில் திமிங்கல இனங்கள் குறைந்து கொண்டே வருவதாகக் கூறப்படுகிறது. வருடா வருடம் சராசரியாக ஒவ்வொரு பிரதேசத்திலும் 2500 திமிங்கலங்கள் வேட்டையாடப்பட்டு வருவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

# விண்வெளிப்பயிற்சி

பிரித்தானிய விண்வெளி வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி ஒரு பெரிய விண்கலத்தை ஒதுக்கியிருக்கிறது. விண்வெளி வீரர்களுக்குரிய தகுந்த பயிற்சிப் பாடசாலைகள் தற்போது உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய முறையில் பயிற்சியளிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. கொலம்பிய விண்வெளி விபத்துக்குப் பிறகு, மிகவும் கவனமாகவே விண்வெளி ஆய்வு என்பது கவனிக்கப்பட்டு வருகிறது.



இதேபோல ஒரு பயிற்சி டெக்ஸாஸிலும் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. கடந்த முறை கொலம்பிய விபத்து ஏற்படும் போது, டெக்ஸாஸிருந்தே விண்வெளிக்குப் பயணிகள் சென்றதாகவும், அத்துடன் 2003ஆம் ஆண்டில் இவர்களுடைய கவனக்குறைவு, போதிய பயிற்சியின்மை ஆகியன தான் விபத்துக்குக் காரணம் எனவும் குறிப்பிடப்படுகிறது.

# வன்னியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கியூடெக் நிறுவனத்தால் உதவிகள்!

கிளிநொச்சி —

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களில் 15 ஆயிரம் பேருக்கு கியூடெக் நிறுவனத்தின் போசாக்கு திட்டத்தின் கீழ் சத்துணவுத் திட்டம் கடந்த ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கியூடெக் உதவி இயக்குநர் வணபிதா ஜீ.பீற்றர் அடிகளார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

போசாக்கு திட்டத்திற்கென 57 லட்சம் ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது. இந்த திட்டமானது பல தரப்பட்ட அனர்த்தங்களைச் சந்தித்த வன்னிப்பிரதேச மாணவர்களின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறையை தொண்டர் ஆசிரியர்கள் துணையோடு ஓரளவு நிறைவு செய்து இதன் வழியாக பல ஆயிரம் மாணவர்களின் கல்வியை விருத்தி செய்யும் நோக்கில் கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு ஆகிய கல்வி வலயங்களால் 148 பேருக்கு 2004 ஆம் ஆண்டுக்குரிய கொடுப்பனவாக 18 லட்சம் ரூபா வரை வழங்கப்பட்டது.

இதைவிட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் 100 தொண்டர்களுக்கு 13 லட்சம் ரூபா வரை கொடுப்பனவாக வழங்கியுள்ளோம்.

வன்னியில் 23 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவாக 2 லட்சத்து 62 ஆயிரம் ரூபாவும், படிப்பதற்கு அறிவு ஆற்றல் இருந்தும் வறுமை காரணமாக பெற்றோரை இழந்த 36 மாணவர்களுக்கு ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 600 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர வைத்திய வசதிகளற்ற இடங்களில் நடமாடும் வைத்தியசேவை நடத்தியதன் மூலம் 68 ஆயிரத்து 400 நோயாளர்கள் பயன் பெற்றுள்ளனர். அத்துடன் மேலதிக சிகிச்சைக்குரிய பயண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 5 சிறுவர் இல்லங்களை பராமரித்ததன் மூலம் 235 சிறுவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களையும் வழங்கியுள்ளோம்.

கண்டாவளைப் பிரதேசத்தில் கரித்தாஸ் பிரான்ஸ் அமைப்பின் செடேக் ஸ்தாபன அனுசரணையுடன் 65 வீடுகள் புனரமைக்கப்பட்டதுடன், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 190 பேருக்கு மீன்பிடி உபகரணங்களும் வழங்கப்பட்டன. மற்றும் கால்நடை வளர்ப்புக்காக 50 பயனாளிகளுக்கும், விவசாயத்துக்காக 75 பயனாளிகளுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன. சுயதொழில் ஊக்குவிப்பு வழங்கப்பட்டதன் மூலம் 400 பேர் பயனடைந்துள்ளனர்.

மேலும் கடந்த ஆண்டு சுயதொழில் வாய்ப்புகளுடன்- வீடு புனரமைப்புவேலை, தீயால் சேதமடைந்த வீடுகள் புனரமைப்பு, ஆங்கில கல்விப் போதனை, பொது விளையாட்டுநிகழ்வு, கிணறு புனரமைப்பு, சமூக உறவு பரிமாற்றம், மனநிலை பாதிக்கப்பட்டோருக்கு உதவி, கிடுகு வழங்கல், உயர் கல்வி, கலாசார நிகழ்வு, வெள்ள நிவாரணம், புதிய வீடமைப்புத்திட்டம் போன்ற பல உதவிகள் கியூடெக் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

*

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜூலை - 05

1791 : அமெரிக்காவுக்கு பிரிட்டிஷ் தூதர் ஒருவர் முதன் முதலாக நியமிக்கப்பட்டார்.

1826 : சிங்கப்பூரை பிரிட்டிஸாருக்கு குத்தகைக்கு எடுக்க ஏற்பா செய்து, ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டவரும் லண்டன் விலங்கியல் பூங்காவை உருவாக்கியவர்களில் ஒருவருமான சேர் ஸ்டாம்ஃபோர்ட் ராஃபிள்ஸ் மரணமானார்.

1828: இரசாயனவியலில் நிலை விகிதக் கொள்கையை வகுத்தளித்த பிரான்ஸ் இரசாயனவியலாளர் ஜோசப் லூயிஸ் பிரஸ்ட் காலமானார்.

1909: பிரிட்டனில் சாத்தவீக முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் முதன் முதலாக நடைபெற்றது. அங்கு பெண்ணுரிமை கோரி போராடிய செல்வி.மரியான் வாலெஸ் டன்லப் என்பவர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டபோது அவரே முதன் முதலாக உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தார்.

1914: ரஷ்யா செர்பியாவுக்கு உதவி செய்தால் ஒஸ்ரியா, ஹங்கேரி போன்ற நாடுகளுக்கு ஜேர்மனி உதவிசெய்யுமென ஜேர்மனியின் கெய்சர் வில்ஹெல்ம் மேற்படி நாடுகளுக்கு உறுதியளித்தார்.

1917: ரஷ்யாவின் நிவால் என்ற கடற்படைத் தளத்தில் இருந்து மரணப்படைகள் என்ற படைப்பிரிவு முதலாம் உலக யுத்தத்தில் ஈடுபடப் புறப்பட்டது.

1918: முதலாவது உலக யுத்த நிலையால் ஒஸ்ரியப் படையணியில் இருந்து இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் ஓடிவிட்டதாகக் கண்டறியப்பட்டது.

1919: அயர்லாந்தில் போராடிவரும் சீன் பெயின் இயக்கம் சட்டவிரோதமானதென்று அறிவிக்கப்பட்டது.

1935: தொழிற்சங்கங்களில் சேருவதற்கு உரிமையளிக்கவும், தொழிற்சங்கங்களது தேர்தலை மேற்பார்வை செய்யவும் வழிசெய்வதான தேசிய தொழிலாளர் உறவுச்சட்டம் அமெரிக்காவில் கொண்டுவரப்பட்டது.

1946: பாரிஸில் உடைகள் கண்காட்சி நடைபெற்றது. இதில் லூயிஸ்ரியர்டு என்பவரால் வடிவமைக்கப்பட்ட பிகினி என அழைக்கப்படும் நீச்சல் உடை - முதன் முதலாக காட்சிப் படுத்தப்பட்டது.

1948: தொட்டில் முதல் சுடுகாடு வரை அனைவருக்கும் இலவச மருத்துவ உதவி அளிக்க வகை செய்யும் தேசிய மருத்துவ உதவிச் சட்டம் - பிரிட்டனில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

1968: ரஷ்யாவில் இருந்து முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் இந்தியா வந்து சேர்ந்தது.

1977: பாகிஸ்தானில் இராணுவம் திடீரென ஆட்சியைக் கைப்பற்றியது. இராணுவத்தளபதி முகம்மது ஷியா உல்ஹக் இராணுவ ஆட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இராணுவச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1980: விம்பிள்டன் ஒற்றையர் ஆட்டத்தில் தொடர்ந்து ஐந்தாவது தடவையாக ஜோன் போர்க் வெற்றிபெற்றார்.

1987: தமிழீழ விடுதலைப் போரில் முதன் முதலாககரும்புலித் தாக்குதல் நடைபெற்றது. துன்னாலையைச் சேர்ந்த வல்லிபுரம் வசந்தன் என்ற இயற் பெயர் கொண்ட கரும்புலி கப்டன் மில்லர் தம்மின விடுதலைக்காக தம்முடலோடு வெடி சுமந்து வெடித்தார்.

1992: இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பலவேகய - 2 என்ற படைநடவடிக்கையின் போது விமானப் படைக்குச் சொந்தமான வை - 8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

✪ : அல்ஜீரியாவின் விடுதலை தினம்

✪ : வெனிசுலா சுதந்திர தினம்

தொகுப்பு - சந்துரு

# வடக்கு - கிழக்கிலுள்ள முன்பள்ளிகளை நிர்வகிப்பது குறித்து கலந்துரையாடல்!

## கிளிநொச்சியில் நடைபெற்றது

கிளிநொச்சி —

வடக்கு -கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய மாவட்டத் தலைவர்கள், இணைப்பாளர்கள் ஆகியோருக்கான விசேட கலந்துரையாடல்- கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் பாண்டியன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய எட்டு மாவட்டங்களின் மாவட்ட, வலய இணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்கில் அமையப்பெற்றுள்ள முன்பள்ளிகளை எதிர்காலத்தில் நிர்வகிப்பது தொடர்பாகவும், முன்பள்ளிகளின் அபிவிருத்திகள் தொடர்பாகவும் முன்பள்ளிச் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்கு எவ்வாறு அமையப் பெற்றிருத்தல் வேண்டுமெனவும், அவற்றில் முன்பள்ளி ஆசிரியர்களின் அணுகுமுறைகள் எத்தகையவை என்பது தொடர்பாகவும் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

இந்தக் கலந்துரையாடலில் விசேட பிரதிநிதிகளாக வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய கட்டமைப்புத் தலைவர்களும், வவுனியா தெற்கு உதவிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய உதவிக் கல்விப் பணிப்பாளர், துணுக்காய் வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

ஏனைய மாவட்டங்களில் உள்ளதுபோன்றும் மாவட்ட, வலய, பிரதேசங்களில் செயற்பட்டுவருவது போன்றும் அம்பாறை மாவட்ட அலுவலகமும் அடுத்தவாரம் திறக்கப்பட்டு, முன்பள்ளிகள் தொடர்பான வேலைத்திட்டச் செயற்பாடுகளையும் மேற்கொள்வது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

*

# கரும்புலிகள் தின நிகழ்வு

ஆழியவளை —

மருதங்கேணிப் பிரதேசத்தில் கரும்புலிகள் நினைவு தினத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவதற்குரிய நடவடிக்கைகள் பொது அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனையொட்டி இந்தப் பிரதேசத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் மருதங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

அத்துடன், பொது இடங்களிலும், மாவீரர் துயிலும் இல்லத்திலும் சிரமதானப் பணியை மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இறுதி நாளான இன்று நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகள், சிறப்புரைகளும் இடம்பெறுவதுடன், கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலியும் செலுத்தப்படவுள்ளன. (122)

---

முல்லைத்தீவு —

கரும்புலிகள் தினமாகிய இன்று முல்லைத்தீவு வைத்தியசாலையில் - இரத்ததானம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ கடற்படையின் அரசியற்துறையினரின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு வைத்தியசாலையில் இரத்ததானம் செய்ய மக்கள் முன்வந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொக்கணை தொடக்கம் நாயாறு வரையான பகுதி மக்கள் மற்றும் வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புக்களின் பணியாளர்கள் என அனைவரும் இந்த இரத்ததானத்தில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது, கடும் பாதிப்பை எதிர்நோக்கிய மக்கள் - கரும்புலிகளின் நினைவாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

*

---

புதுக்குடியிருப்பு —

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரும்புலிகள் நாளை முன்னிட்டு, விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் போட்டிகளில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில், புதுக்குடியிருப்பு அரசியற்துறையினரால் மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றது.

இந்த நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் பிறையாளன் தலைமையில் இடம்பெற்றது.

(வெ)

# முல்லைத்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் மாதிரி விற்பனை நிலையம் திறப்பு

புதுக்குடியிருப்பு —

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மாதிரி விற்பனை நிலையம் - கடந்த புதன்கிழமை இரவு 7 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.சிறிபாலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழீழ மருத்துவப் பிரிவைச் சேர்ந்த மனோஜ், தமிழீழ வைப்பக புதுக்குடியிருப்பு கிளை முகாமையாளர் சுரேஸ், மக்கள் வங்கி முல்லைத்தீவுக் கிளை உதவி முகாமையாளர் உட்படப் பலர் மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார். கூட்டுறவுக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிவமயம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பெயர்ப்பலகையை புதுக்குடியிருப்பு பிரதேசசெயலர் செ.தயானந்தா திரைநீக்கம் செய்துவைத்தார். மாதிரி விற்பனை நிலையத்தை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். அடுத்து இந்தப் பகுதிக்கான கிளையை சுகுமார் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உட்படப் பலர் உரையாற்றினர்.

புதுக்குடியிருப்பு, முல்லைதீவு வீதியில் குழந்தையேசு ஆலயத்துக்கு முன்னால் அமைக்கப்பட்ட இந்த மாதிரி விற்பனை நிலையமானது - கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இது ஓர் முதல்மாதிரி விற்பனை நிலையம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(வெ)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

திருக்குறள்

# நமது நோக்கு

## தெய்வீகத் துறவிகளின் நினைவோடு...

இன்று கரும்புலிகள் நாள்!

"அழகு மாணிக்கங்களாக அல்ல... அத்திவாரக் கற்களாக..." என்ற அந்த வார்த்தைகள் கண்ணில் படும்போதெல்லாம் துளிர்க்கும் கண்ணீருக்கும், சிலிர்க்கும் உடலுக்கும், உயிர்ப்புறும் மனதிற்கும் மட்டும் தெரியும் அதன் அர்த்தத்தின் ஜீவன்!

மானுடவலிமையின் மகத்துவத்தை மட்டுமல்ல-மகோன்னதத்தையும் உலகிற்கு பிரமிக்கத்தக்க வகையில் உணர்த்திய மனோபலம் கொண்டவர்கள் அவர்கள்-

அவர்களின் இந்த மனோபலத்தின் மூலபலம், அவர்களின் ஆத்மபலமேயாகும்.

எங்கள் தேகம் இந்தத் தேசத்தில் வேரூன்றி நிற்கிறது. ஆனால், எங்கள் தேசமோ இவர்களின் தேகத்தில் தான் தன் ஆணிவேரை ஊன்றி வைத்துள்ளது...

அதனால்தான் அவர்கள் அத்திவாரக் கற்களானார்களோ...?

வந்தபகை அழியவும், வரும்படை நடுங்கவும் வைக்க அவர்களுக்குத் தேவைப்பட்டது தங்களின் உயிராயுதம் மட்டுமே!

ஒரு கணப்பொழுது மட்டுமே...!

நெல்லியடியில் மில்லர் தன் இறுதிமூச்சை தாய் மண்ணுக்கு அர்ப்பணித்த அந்தக் கணநேர அதிர்வு தானே... எங்களின் உயிர் மூச்சை நம்பிக்கையுடன் துடிக்க வைத்தது!

ஒவ்வொரு கரும்புலியின் நுழைவுடன்தானே இருண்டிருந்த எம்தேசத்தின் திசைகளில் சுதந்திர வெளிச்சம் பரவத்தொடங்கியது...

அடிமை இருளை விழுங்க், தம்மை ஒளிரவைத்த பின்னரே அவர்கள் கரும்புலிகள் என இனங்காணப்பட்டார்கள்...

அதுவரைக்கும் அவர்கள் எரிமலைகளாக நடமாடிய கதை எவருக்கும் தெரியாது...

மௌனப்புயல்களாக இலக்கு நோக்கி மையம் கொண்டு நகர்ந்ததையும் எவரும் அறிந்ததுமில்லை...

அவர்களின் உடல்களுள் பூகம்பத்தை உண்டுபண்ணும் வல்லமை உயிர்த்திருந்தமை யாருக்கும் புரிந்ததுமில்லை...

அவர்களின் அந்த அமைதிக்கான பின்பலம், அவர்களின் தாயகம் மீதான பக்தியைத்தவிர வேறெதாகவும் இருக்கமுடியாது...

தெய்வ பக்தியை எவரும் எல்லாக்காலத்திலும் வெளிக்காட்ட முடியும். ஆனால், தேசபக்தி... ஆழமானது... ஆத்மார்த்தமானது... தன்னைத் தான் தேசத்திற்கு அர்ப்பணம் செய்தபின்னரே அடையாளப்படுத்தப்படுவது. கரும்புலிகளின்-தம்மை தேசத்திற்காக அர்ப்பணிக்கும் 'தற்கொடைத்' தன்மை அசாதாரணமானது...

அதனால்தான் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமும் அசாதாரண வெற்றிகளால் உலகைப் பிரமிக்க வைத்தது... எதிரிப்படைக்கு மனோபலம் குன்றவைத்தது. வரலாற்றில் வைரவரிகளாக அந்த வெற்றிகளைப் பொறிக்கவும் வைத்தது.

கரும்புலிகள் பற்றித் தேசியத் தலைவர் பின்வருமாறு கூறுவார்-

"மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத்துறவாம். அந்தத் தெய்வீகத் துறவிகள்தான் கரும்புலிகள்..."

எத்தகைய அற்புதமான விளக்கமிது...

துறவிகள் பற்றற்றவர்கள்... அதாவது, உலகப் பற்றற்றவர்கள். ஆனாலும், தெய்வத்தின் மீது மட்டும் பற்றுக் கொண்டவர்கள்... மோட்சவாழ்வை வேண்டி நிற்பவர்கள்...

தெய்வீகத்துறவிகளான கரும்புலிகளோ, சுய நலத்தை முற்றாகத்துறந்தவர்கள்... சாதாரண துறவிகள் வீடுபேறு வேண்டி அதாவது, மோட்சத்தை நாடி தவம்செய்யும் போது... கரும்புலிகளோ - நாடும், மக்களும் சுதந்திரப் பேறடைய வேண்டி தம்மைத்தாமே ஆகுதியாக்கிக்கொள்ளும், அசாதாரண தெய்வீக குணாம்சம் கொண்டவர்களாக உள்ளனர்.

'கரும்புலிகள்' தமிழ்த்தாய் செய்த அருந்தவத்தின் பயனாக அவதரித்தவர்கள் என்பதைத், தமிழ் மக்களின் விடுதலைப்போராட்ட வரலாறு அழுத்தமாகவே உணர்த்தி நிற்கிறது...

அந்தத் தெய்வீகத்துறவிகளுக்கு வணக்கம் செலுத்துவோம். தமிழர் வரலாறு அவர்களின் இலட்சியம் நோக்கித் தொடர்ந்து தடம்பதிக்குமென அந்த வணக்கத்தின் போது உறுதி கூறுவோம்.

## நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# பிரம்புகள் வந்து குவிகின்றன பனைகள் எங்கே போயின!

நீர் அந்தக் காலத்தில் பள்ளிக் கூடத்தில் படித்த போது பிரப்பம்பழம் வாங்கியிருக்கிறீரா? அதைச் சுவைத்த அனுபவம் உமக்கிருக்கிறதா என்று கேட்டபடியே வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

பள்ளிக் கூடத்தில் பிரம்படி வாங்கியதை இப்போது நினைவுபடுத்திக் கொண்டுவருகிறீர் என்ன விடயம் என்று கேட்டேன்.

இல்லை. அந்தக் காலத்தில் பிரம்பு என்று சொன்னாலே வாத்தியார் கையிலிருக்கும் பிரம்புத்தடிதான் ஞாபகம்வரும். இன்று தென்னிலங்கையிலிருந்து பிரம்பில் செய்யப்பட்ட எத்தனை பொருள்கள் லொறிகளில் வந்து யாழ்ப்பாணத்தில் குவிந்து கொண்டிருக்கின்றன என்று பார்த்தீரா? கடையில் காய்கறிகள், சாமான்கள் வாங்கிவருவதற்குச் சிறிய பிரம்புக்கூடைகள் முதல் பிரம்பில் உருவாக்கப்பட்ட கட்டில்கள், சாய்மனைக் கதிரைகள், நாற்காலிகள், மேசைகள் என்று பலவிதமான வீட்டுப் பாவனைப் பொருள்கள் குவிந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பொருள்களையெல்லாம் பார்க்கும்போது வாத்தியார் அடித்த பிரம்பும் அந்த அடியின் ருசியும் நினைவுக்கு வந்தன என்றார் பரமசிவம்.

போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்தபின் தென்னிலங்கையிலிருந்து தினமும் ஏராளமான பொருள்கள் யாழ்ப்பாணத்தில் வந்து குவிந்துகொண்டுதானிருக்கின்றன. காட்டு விறகு, மரங்கள் மட்டுமல்ல, மரத் தளபாடங்களும் வருகின்றன. முன்பு நல்ல தேக்கு மரத்தில் செய்யப்பட்ட கண்ணாடி அலுமாரிகள் மொறட்டுவ பகுதியிலிருந்து வந்து விற்பனையாகும். இப்பொழுது அதேமாதிரி தகரத்தில் செய்யப்பட்ட கண்ணாடி அலுமாரிகள் வீதிவீதியாகவும் வீடு வீடாகவும் விற்பனைக்கு வருகின்றன என்றேன்.

போர்க்காலத்தில் வன்னிப் பகுதிக்கு மட்டுமல்ல, யாழ்ப்பாணத்துக்கும்கூட எந்தப் பொருளையும் கொண்டுவரமுடியாது. இங்குள்ள மக்களின் போக்குவரத்துக்கு ஒரே சாதனமாக இருந்த சைக்கிள்களுக்குரிய ரயர், ரியூப் கூடக் கிடைக்கமுடியாத நிலை. இன்று நாளும் பொழுதும் வந்து குவியும் மோட்டார் சைக்கிள்களைப் பார்த்தீரா? யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டாத ஆண்கள் பெண்களையும்கூட விரல் விட்டு எண்ணிவிடலாம். வாகனங்கள் பெருகிவிட்டன, வீதிகள்தான் அகட்டப்படும் என்ற செய்திகளுடன் நின்றுவிட்டன என்றார் பரமசிவம்.

பிரம்பு பற்றி ஏதோ சொல்லவந்து இப்போ கதையை வேறெங்கேயோ கொண்டுபோய் விட்டீரே என்றேன்.

நான் சொல்ல வந்த விடயமும் பிரம்புடன் சம்பந்தப்பட்டதுதான்! பிரம்பினால் கட்டில்கள் தயாரிப்பது போல் பனையிலும் செய்யலாம். தமிழ் நாட்டில் கிராமப்புறங்களில் நான்கு பனம் தடிகளையும் சில பனை நார்களையும் கொண்டு ஒரு சில மணித் துளிகளில் கட்டில் தயாராகிவிடும். உயர்ந்த ரக மரங்களில் தயாரிக்கப்பட்ட கட்டில்கள் கதிரைகளுக்கும்கூட பனை நார்களில் பின்னல் பின்னி அழகாக இருப்பிடம் செய்து விடுவார்கள். பிரம்பினாலும் இப்போது பிளாஸ்ரிக்கினாலும் பின்னப்படும் கதிரைகள் கட்டில்களை விட பனைநாரில் பின்னப்படும் கதிரைகள் கட்டில் களைவிட பனை நாரில் பின்னப்படும் கதிரைகள் இருபத்தைந்து முப்பது வருடங்கள் கூடப் பாவிக்கக்கூடியதாக இருக்கின்றது என்று பரமசிவம் சொன்னார்.

சுமார் நாற்பத்தைந்து, ஐம்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் வீதியில், பெருமாள் கோவிலடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்று ஒன்று இருந்தது. இந்தச் சங்கத்தில் நெசவாளர் பலர் தறிகளில் நெய்து அழகான தரமான, சேலைகள், வேட்டிகள், போர்வைகள், துவாய்கள் என்று உற்பத்தி செய்தனர். இந்தக் காலத்தில் பனை நாரில் கதிரை, கட்டில்கள் பின்னுவதில் தேர்ச்சி பெற்ற ஒருவரை இதே நெசவாளர் சங்கம் இந்தியாவில் நாகர் கோவிலிலிருந்து அழைப்பித்தது. பனம்பொருள் அபிவிருத்தியிலும் அக்கறை செலுத்திய இந்த நெசவாளர் சங்கம் நாகர் கோவிலிலிருந்து அழைப்பித்த கைவினைஞரைக் கொண்டு பனை நாரிலிருந்து கட்டில், கதிரைகள் பின்னும் கலையில் பலருக்கும் பயிற்சியளித்தது. இப்படிப் பனை நாரில் பின்னப்பட்ட ஒன்றிரண்டு நாற்காலிகளாவது இன்றும் சில வீடுகளில் இருக்கக் கூடும் என்று நான் சொன்னேன்.

இப்பொழுது தமிழ்நாட்டில் நாகர்கோயிலில்கூட பிளாஸ்ரிக் கதிரை பின்னல்கள்தான் ஆக்கிரமிப்புச் செய்துள்ளன. என்றாலும் நாம் நமது பனையிலிருந்து இன்னும் பல பொருள்களை உற்பத்தி செய்து பயன்படுத்தவேண்டும். கோடை வெய்யிலுக்குப் பனை ஓலையில் இழைத்த அழகான தொப்பிகளைப் பயன்படுத்தலாம். கட்டில் கதிரை பின்னுவதை மீண்டும் புதுப்பிக்கலாம். புத்தகங்கள் அடுக்கி வைக்கும் சிறிய அலுமாரிகள் பிரம்பில்தான் செய்யவேண்டுமா, பனம் தடிகளிலும் பனை நாரிலும் செய்ய முடியாதா? பனம்பொருள் அபிவிருத்திச் சபை இந்த விடயத்தில் கொஞ்சம் அக்கறையுடன் கவனம் செலுத்தினால் நல்லது என்றார் பரமசிவம்.

தமிழ்நாட்டில் எங்களைப் போல் புளுக்கொடியல், பனாட்டு, ஒடியல் கூழ் என்ற பண்டங்கள் செய்யப் பழகவில்லை. அவர்களுக்கு இவற்றின் சுவையும் பயனும்கூடத் தெரியாது. ஆனால் கதிரை, கட்டில் நாற்காலிகள் பின்னவும் உருவாக்கவும் தெரிந்துவைத்திருக்கிறார்கள் என்றேன்.

என்ன இருந்தாலும் தமிழனுக்கென்று படைக்கப்பட்ட பனையிலிருந்து நாம் இன்னும் உச்சக்கட்டப் பயனைப்பெறவில்லை இதில் பன்பொருள் அபிவிருத்திச்சபை தமிழ்நாடடுடன் தொடர்பு வைத்து பயன்களைப் பெருப்பித்துக்கொள்ள முனைய வேண்டும் என்று சொன்னபடி நடந்தார் பரமசிவம்.

### வாசகர் நோக்கு

## சாவகச்சேரி மருத்துவமனை புனரமைக்கப்படுமா?

யாழ் மாவட்டத்தில் யாழ் போதானா வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை ஆகியவற்றுக்கு அடுத்த படியாக பெரிதும் அதிகமக்கள் பயன்படுத்தும் மருத்துவமனையாக சாவகச்சேரி மருத்துவமனை விளங்குகிறது. எனினும், கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் சேதமான இம்மருத்துவமனை அற்ப சொற்ப கட்ட டங்களில் மிகவும் வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருவது வருந்தத்தக்கது.

சாவகச்சேரி மருத்துவமனை - சாவகச்சேரி நகரம்-நகரை அண்டிய முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தென்மராட்சி கிழக்கு பகுதிகளான கொடிகாமம், வரணி, மிருசுவில், உசன் மற்றும் வட்மராட்சி கிழக்கு பிரதேச மக்கள் பயன்படுத்தும் மருத்துவமனையாக விளங்குகிறது. நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த மருத்துவமனைக்குச் சிகிச்சை பெறவருகிறார்கள்.

எனினும் கடந்தகால யுத்தநடவடிக்கைகளால் சேதமான இந்த மருத்துவமனை பூரணமாக புனரமைக்கப் படவில்லை. இதனால் நோயாளர்கள் மிகவும் கஸ்ரம் அடைகின்றனர்.

எனவே பல பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மக்களும் உரிய முறையில் சிகிச்சை பெற ஏதுவாக, நவீன வசதிகளுடன் இம் மருத்துவமனையை புனரமைக்க நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நடவடிக்கை எடுப் பார்களா?

சாவகச்சேரி-எஸ்.ரி.சிந்துஜன்

## கரும்புலிகள் நினைவாக...

மா.க.ஈழவேந்தன்





# சாவறிந்து சாவெதிரே சென்றவர்கள் சாவை வென்று சரித்திரமாய் நின்றவர்கள்

திட்டமிட்டு உருவாக்கப்படுகின்ற சிங்களப் பேரினவாதத்தின் வெறியாட்டத்தைத் தடுக்க, எம்மை ஏமாற்றுகின்ற முயற்சிகளை முறியடிக்க, விடுதலைப் புலிகளுக்குக் கூட பாதுகாப்பற்ற நிலை நிலவுவதை நீக்க, எம் இனத்தின் அடிமை நிலையை அகற்ற, மீட்சியும் - விடுதலையும் கிடைக்க, அனைத்துத் தமிழ் மக்களும் கரும்புலிகளாக மாறும் சூழ்நிலை உருவாகிறது.

உலக விடுதலை வரலாற்றை உன்னிப்பாகக் கவனிக்கும் எவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற வீரம் செறிந்த வரலாற்றைப் படைக்கும் ஒரு இயக்கம் இல்லை என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும். விடுதலைப் புலிகளின் வீர வரலாற்றை நாம் எண்ணுகின்ற பொழுது, நெல்சன் மண்டேலாவின் தலைமையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற கறுப்பர்களின் போராட்டத்தையும், மறைந்த தலைவர் அரபாத்தின் தலைமையில் நடைபெற்ற பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் ஒப்பு நோக்குவதுண்டு. இன்று தென்னாபிரிக்காவில் கறுப்பர்கள் விடுதலை பெற்றுள்ளனர்.

பலஸ்தீனத்தைப் பொறுத்தவரையில், யொசீர் அரபாத்தின் மறைவையடுத்து, ஒரு குழப்ப நிலை அங்கு நிலவுகிறது.

பாலஸ்தீனத்தைப் பொறுத்த வரையில் இழந்த நாட்டை மீட்பதற்காகப் போராடுகிறார்கள். நாமோ இருக்கின்ற நாட்டை இழக்காதிருக்கப் போராடுகின்றோம். மேற்குறித்த இரு நாடுகளுக்கும் வெவ்வேறு நாடுகளில் ஆதரவு இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் உலக நாடுகளின் ஆதரவற்ற நிலையிலும், எதிர்ப்புக் கிடையிலும் எம் போராட்டம் தொடர்கிறது.

நாம் முன்பே குறிப்பிட்ட தற்சமயம் விடுதலைப்புலிகள் போன்று வீரம் செறிந்த வரலாற்றின், தியாகம் நிறைந்த வரலாற்றினை வேறு எவரும் நிலைநாட்டியதில்லை. எம்மைப் பொறுத்த வரையில் விடுதலைப்புலிகள் ஏறக்குறைய பதினெண்ணாயிரம் விடுதலைப் போராளிகளை இழந்துள்ளனர். இரு இனங்களுக்கிடையே மோதல் ஏற்பட்டதன் காரணமாக, ஏறக்குறைய அறுபதினாயிரம் தமிழ்ப் பொது மக்களையும் நாம் இழந்துள்ளோம்.

**உலகை உலுக்கிய கரும்புலிகள்.**

இத்தகைய வீரம் செறிந்த, தியாகம் படைத்த விடுதலைப் புலிகளின் பிரிக்க முடியாத அங்கமாக விளங்குவது தான் கரும் புலிகள். 'கரும்புலிகள் என்ற சொற்றொடர் இன்று உலகம் முழுவதும் பயபக்தியோடு பேசப்படுகிற சொல்லாக விளங்குகிறது'. தம் உயிரை துச்சமென மதித்து, சாவா, வாழ்வா என்று கரும்புலிகள் நடத்துகின்ற போராட்டத்தைக் கண்டு உலகமே வியப்பில் மூழ்கியுள்ளது.

**கரும்புலிகள் பற்றி பிரபாகரன் மொழிந்தவை.**

ஒரு சமுதாயத்துக்காக ஒரு தனி மனிதன் சாகத் துணிவானாயின், அந்தச் சமுதாயம் வாழும் என்று அண்ணல் காந்தி கூறியுள்ளார். ஈழத் தமிழரைப் பொறுத்த வரையில் - எமது விடுதலை வேட்கையை நிறைவேற்ற ஒருவர் மட்டுமல்ல, ஆயிரக் கணக்கில் சாகத் துணிந்துள்ளோம்.

முன்பு கரும்புலிகளை வர்ணிக்கும் போது, 'தற்கொலை' படை என வர்ணிப்பதுண்டு. அந்தச் சொல் போதியளவுதக்க பொருளை உணர்த்தாத நிலையில், அது இப்பொழுது தற்கொடைப் படையாக மாற்றப்பட்டுள்ளது. இது தன் கொள்கைக்காக, இனத்துக்காக , நாட்டுக்காக, தம்மைக் கொடுக்க முன்வந்தோர் என்ற பொருளை உணர்த்தி நிற்கின்றது. 'தமிழீழ விடுதலைப் புலிகளின் பல்வேறு போர் வடிவங்களில் மிக உயர்ந்ததும், உன்னதமுமான போர் வடிவம் தான் கரும்புலித் தாக்குதல் ஆகும். தன்னை இழந்து அல்லது எதிரிகள் பலரை அல்லது எதிரிகள் பலமிக்கதொரு இலக்கை அழிக்கக்கூடிய படையணி ஒன்றை அமைக்கும் எண்ணத்தை, தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடக்கத்திலிருந்தே கொண்டிருந்தார்'. அந்த எண்ணக்கரு செயல் வடிவம் காண, படிப்படியாக உயிர்த்தியாகம் செய்யும் வீரர்களை எம் தலைவர் பிரபா உருவாக்கி வந்தார்.

சிங்களப் படையினர் Operation Liberation என்ற பெயரில் படை நடவடிக்கை வாயிலாக வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிய போது, நாம் வெற்றி அடைந்துள்ளோம் எனக் கொக்கரித்தனர்.

**ஜூலை 5-1987 ஆம்ஆண்டில் கரும்புலித் தாக்குதல்.**

வடமராட்சியைக் கைப்பற்றியது உளவியல் அடிப்படையில் தாம் பெரும் வீரர் என்ற எண்ணத்தை சிங்களவர் கொண்டிருந்தனர். இத்தகைய உளவியல் வளர்ச்சியை சிங்களப்படை கொண்டிருப்பது எமக்கு ஆபத்து என்று உணர்ந்த நம் தேசியத் தலைவர் - ஒரு கரும்புலித் தாக்குதலை நடத்த வேண்டிய தேவை உண்டு என்பதை அவர் உணர்ந்து, அதற்குச் செயல் வடிவம் கொடுத்தார்.

1987 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி வீரன் புகுந்து, அந்த முகாமை சுக்குநூறாக்கினார். சிங்கள அரசையும், அதன் படைப் பலத்தையும் கிலி கொள்ளச் செய்த அந்த முதலாவது கரும்புலித் தாக்குதலை இனிதே நிறைவேற்றி வைத்தவர் கப்டன் மில்லர். இந்தத் தாக்குதலை அடுத்து, இன்றுவரை உலகம் வியக்கும் பல கரும்புலித் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

கரும்புலிகள் 'உயிர் நமக்கு வெல்லம் அல்ல உணருவாய் நற்றமிழனே' என்று ஓங்கி ஒலித்துக் கொண்டுதான் களம் புகுகின்றார்கள்.

சாதாரண போராட்டத்தில் வெற்றி பெற்றுத் திரும்பலாம் என்ற நம்பிக்கை சிலருக்கு இருக்கலாம். ஆனால் கரும்புலிகளைப் பொறுத்தவரை நாம் களத்தில் இறப்பது உறுதி என்ற நிலையில்தான் களம் புகுகின்றார்கள். எதிரிகளின் படைப் பலம் பற்றி இவர்கள் அக்கறை கொள்வதில்லை. விளைவைப் பற்றிப் பொருட்படுத்தாது தம் பலத்தையே நம்பி இவர்கள் களத்தில் குதிக்கின்றார்கள். இவர்களின் தாக்குதல், இலக்குகள் தரைப் படையையும், கப்பற் படையையும், காவற்படையையும், வான்படையையும் உள்ளடக்கும். இவற்றின் பொருளை நாம் விரிக்கத் தேவையில்லை.

பொருள் தொக்கு நிற்கின்றது என்றே நாம் குறிப்பிடலாம்.

1987 ஜூலை 5 ஆம் திகதி கரும்புலி கப்டன் மில்லர் (Black Tiger) வடமராட்சி, நெல்லியடியில் நடத்திய தாக்குதல், ஈழத் தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை. சிங்கள ஆட்சியையும், சிங்களப் படையையும் தொடை நடுங்க வைத்தது. இந்திய அரசையும், உலக நாடுகளையும் அதிர்ச்சி கலந்த வியப்பில் ஆழ்த்தியது. சாகத் துணிந்த எம்மை நீ என்ன செய்யப் போகின்றாய் என்று கேள்வி கேட்கின்ற முறையில் இந்தப் போராட்டம் நடந்தது.

நெல்லியடி போராட்டத்தில் எமக்குமுன் மாவீரனாகக் காட்சி அளிப்பவர் மில்லர். அவரின் தியாக வரலாற்றை வரைவதற்கு வரலாற்றின் பல பக்கங்கள் தேவை. மில்லரின் மாவீரத்தை வரலாறு விரும்புகின்ற அளவுக்கு வரையட்டும். ஆனால், கரும்புலி கப்டன் மில்லரைப் பத்து மாதம் கருவில் தாங்கி, பரிந்து காத்த அவரின் தாயாரின் கூற்றுக்கள்தான் எமக்கு இன்று தேவை.

'என்ர மகன் எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்கிறது என்ர நம்பிக்கை தம்பி. அதனால் நான் அவன்ர போக்குகளைப் பற்றிப் பெரிசா யோசிக்கிறதில்லை'. மில்லரின் அம்மா தன் பிள்ளையைப் பற்றிப் பெருமையோடு கூறிக்கொண்டு இருந்தார். அவன் ஒரு துடியாட்டமான பெடியன். ஒரு இடத்தில் ஆறுதலாக இருக்கிறதைக் காணவே ஏலாது. ஏதாவது ஒண்டு செய்து கொண்டுதான் இருப்பான். மண்ணைக் கிண்டுவான். 'பற்றறியையும்', 'வயரையும்' வைச்சு முடிஞ்சு கொண்டிருப்பான். அல்லது அப்பாவின்ர கார் பொனட்டை திறந்து போட்டு, அதற்குள்ள ஏதாவது கழட்டிப் பூட்டிக் கொண்டிருப்பான்... அம்மா தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

'மற்ற ஆட்களுக்கு உதவி செய்கிற பழக்கம் அவனிட்ட சின்னனில் இருந்தே இருந்தது. ஆர் என்ன உதவி கேட்டாலும், உடனே போய்ச் செய்து கொண்டுப்பான்... முயற்சியும், இரக்கமும் அவன் பிறக்கும் போதே அவனோட கூடப் பிறந்ததுகள். தம்பி மில்லர் சிறுவனாக இருந்த நாட்களில் அப்பா கார் ஓட்டும் போது, அருகில் இருந்து அவதானித்துக் கொண்டிருப்பவன். அப்பா இல்லாத நேரங்களில் அதையே திரும்பச் செய்து பார்க்கத் துவங்கினான். அடிக்கடி நின்ற இடத்திலேயே இயங்கிய கார் பின்பு மெல்ல உருளத் துவங்கியது.

நாள்செல்லச் செல்ல அகலமான வீட்டு முற்றத்தில் முன்னுக்கும், பின்னுக்கும் போய் வந்தது. ஒரு நாள் அம்மா சமையல் அறையில் வேலையாக இருந்த போது, கார் வீதியிலே ஏறி விக்கி விக்கி ஓடத் துவங்கி விட்டது .அம்மாவைப் பயம் பற்றிக் கொள்ள வீதியிலே ஓடி வந்து பார்த்தார்.

இப்படித்தான் இன்னும் ஒரு நாள்...

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் எரிபொருள் தீர்ந்து போனதால், வீட்டுக்கு முன்னால் நின்று திண்டாடிக் கொண்டிருந்தார்கள். எங்கோ இருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த மில்லர், அவர்களிடம் விடயத்தைக் கேட்டறிந்தான். வீட்டிற்குள் வந்தவன், மெதுவாக ஒளித்து ஒளித்து பின்னால் போய், கார் 'ராங்கிற்குள்' குழாயைச் செலுத்தி, வாயால் இழுத்துப் பெற்றோல் எடுத்து அவர்களிடம் கொடுத்து அனுப்பிவிட்டு, ஒரு அசல் அப்பாவியைப் போல அம்மாவுக்கு முன்னால் வந்து நின்றான். நடந்ததைக் கண்ட போதும், அம்மா அவனிடம் எதுவும் கேட்கவில்லை. அம்மாவுக்கும் அது பிழை மாதிரித் தெரியவில்லை.

தன் பிள்ளை எதுசெய்தாலும் நன்மைக்காகவே செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை. அதனால் அவனது செய்கைகளைப் பற்றிஅம்மா கவலைப் படுவதில்லை. காலச் சக்கரம் தன்பாட்டில் உருண்டு சென்றது.

இப்போது 1984 ஆம் ஆண்டின் ஆரம்பம். எங்கள் தேசத்தில் அடிக்கடி வெடியோசை கேட்கத்தொடங்கியது. எங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கை மாறிய பொழுது, அது மில்லர் வீட்டிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. மில்லரின் போக்கு மாறிவிட்டது. முன்பு போல், பழைய நண்பர்களுடன், மாந்தோப்பில் விளையாடுவது நின்று போனது. இப்போது புதிய நண்பர்களுடன் வெளியில் திரியத் தொடங்கினான். ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து அவசர அவசரமாக ஓடி வந்து தம்பி சொன்னான் -அம்மா அம்மா அண்ணா சந்தியடியில் நோட்டிசு கொடுத்து கொண்டு நிக்கிறான்.

அம்மாவுக்கு உள்ளாரப் பயம் தான். ஆனாலும் அம்மா அவனைப் புரிந்து கொண்டார். அவனின் புதிய நண்பர்கள் அவனைத்தேடி வீட்டுக்கு வருவார்கள். மில்லர் அவர்களோடு புறப்பட்டுப் போவான். இப்படி செல்கிறவன் சில நேரங்களில் ஒரு சில இரவுகள் கழித்தும் வருவான். அம்மா எல்லோருக்கும் சாப்பாடு தருவார். எல்லோரும் சிரித்துக் கதைத்து சந்தோசமாகச் சாப்பிடுவதைப் பார்த்து சந்தோஷப்படுவார். இது வழமையாகிப்போனது.

இப்படித்தான் ஒரு நாள் அந்த நண்பர்களோடு புறப்பட்டுப் போனவன் திரும்பி வரவில்லை. 'பயிற்சி முகாமில் நிக்கிறான்' என நண்பர் ஒருவன் வந்து சொன்னான். வீட்டில் எல்லோரும் அழுதார்கள். அம்மாவால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. அவரும் அழுதார். இருந்தாலும் சமாளித்துக் கொண்டார்.

'தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை'. அந்தத் தாய் இறுதிநாளை நினைத்துப் பார்க்கிறார். 'அது ஒப்பறேசன் லிபறேசன் காலம். அந்த நேரம் இங்க எல்லா இடத்திலயும் ஆமி, அதனால் இரவில நாங்கள் நேரத்தோடையே படுத்திடுவம். அண்டைக்கும் நாங்கள் படுத்திட்டம்.. 'திடீரென வீடெல்லாம் அதிர, பெரும் குண்டுச் சத்தம் எங்களைத் திடுக்கிட்டு எழுப்பிச்சுது. கொஞ்சநேரம் சண்டை நடக்கிறதைப் போல சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பிறகெல்லாம் அமைதியாகி விட்டது. பெடியள் நெல்லியடிப் பக்கம் ஆமிக்கு நல்லா அடி குடுத்திருக்கிறாங்கள்போல கிடக்கு என்று எங்களுக்க கதைச்சுப் போட்டு, நாங்கள் படுத்திட்டம்.

அடுத்த நாள் காலையில் நெல்லியடிப் பக்கம் இருந்து வந்த ஒருத்தர் சொல்லி ஊருக்குள்ள அந்தக் கதை மெல்ல மெல்ல எனது காதுக்க வந்த போதுதான் தெரியும்... முதல் நாள் உலுக்கி என்ர நித்திரையால் திடுக்கிட வைத்த அந்தக் குண்டுச் சத்தம்... என்ர பிள்ளையும்.. அப்ப அழவும் ஏலாது. எல்லாப் பக்கத்திலயும் ஆமி... அறைக்குள்ள போயிருந்து எனக்குள்ள மட்டும் குமுறிக் குமுறி அழுதன். றோட்டால ஆமி வாகனங்கள் வாற சத்தம் உறுமிக் கொண்டு கேட்கும். மெதுவாக பின்பக்கத்தால் வீட்டை வந்த சனங்கள் கலைஞ்சு போய் விடுவினம்... பிறகு வருவினம்.. ம்...ம்... என்ர மகன் செத்திட்டான் என்கிறது எனக்கு கவலை தான். ஆனால் அவன் நாட்டுக் காகத்தானே செத்தவன்... அதை நினைக்கப் பெருமையாகத்தான் இருக்கு.

படையினர் தாக்கப்பட்ட நிலையில் இராணுவத்தின் ஆயுதங்களையும், படைக் கருவிகளையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

தமிழீழ விடுதலைப்புலிப் போராட்ட வரலாற்றில் புதிய திருப்புமுனை ஏற்படக் காரணமான கப்டன் மில்லர் தலைமையிலான முதல் கரும்புலித் தாக்குதல் குறித்து மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் 'போரும் அமைதியும்' (War and Peace - Anton Balasingham, Page 97) என்ற நூலில் பின்வருமாறு செய்தி தரப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்திற்கெதிராக முதன் முறையாக விடுதலைப்புலிகள் உருவாக்கிய கரும்புலித் தற்கொலைப்படை - சிங்கள இராணுவப்படை மீது பேரழிவை ஏற்படுத்தும் முறையில் தாக்குதலை நடத்தியது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் மு்காம் அமைத்திருந்த் இலங்கைப் படையினர் மீது, வெடிகுண்டுகள் நிரம்பிய சுமை வண்டியை (லொறி) உள்ளே செலுத்தி அடையாளம் தெரியாத அளவுக்கு இராணுவ முகாமைத் தாக்கி, தரைமட்டமாக்கினார். இந்தத் தாக்குதலின் விளைவாக இராணுவ முகாம் கசுக்குநூறாக்கப்பட்டது. இந்தத் தாக்குதலினால் அதிர்ச்சியடைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், படைத் தலைமைப் பீடமும், வீரர்கள் தோல்வி மனப்பான்மைக்கு ஆளாகாதிருக்க இந்தக் கசப்பான உண்மை நிகழ்ச்சிகளை வெளி உலகம் அறியாது மூடி மறைத்தனர். அதேவேளையில் - இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட பேரழிவை அறிந்த இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் உவகையுற்றனர். இந்தத் தாக்குதலின் வாயிலாகத் தான் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவை பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்து வர முடியும் என்று, தனக்கு ஒரு இந்தியப் புலனாய்வு அலுவலர் கூறியுள்ளதாக அன்ரன் பாலசிங்கம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சுருங்கக் கூறின் 1987 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் நாள் மாவீரன் மில்லரின் தலைமையில் நடத்திய கரும்புலித் தாக்குதல் - ஈழத்தமிழ் மக்களோடு சிங்களவர்களாகிய தம்மால் நேரடியாக மோதி வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வேறு வழியற்ற நிலையில் தனது நிரந்தர எதிரியான இந்தியாவின் காலில் விழுந்து தம்மைக் காப்பாற்றும் படி கேட்கும் நிலையை ஏற்படுத்தியது. இந்தத் தாக்குதலின் விளைவாகத்தான் அதே மாதம் 29 ஆம் திகதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா - ராஜீவ் இடையில் இந்திய அரசுடன், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை செய்ய வேண்டிய நிலையை உருவாக்கியது.

# அப்பாவி இளைஞன் உயிரிழப்புக்கு காரணமான இராணுவத்தின் செயலுக்கு கண்டனம் தெரிவிப்பு!

கடந்த சனிக்கிழமை குருநகர் கடற்பரப்பில் தனது தொழிலை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய அப்பாவி இளைஞன் இராணுவத்தின் பாதுகாப்பு வேலிக்குப் பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரத்தால் தாக்கப்பட்டு, அதே இடத்தில் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் மற்றும் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொண்டு வரும் கொலை முயற்சியின் ஒரு அங்கமாகவே, மக்கள் நடமாடும் பிரதேசங்களில் தான்தோன்றித்தனமாக வாகனங்களைச் செலுத்தி, வாகனங்களால் அடித்து மக்கள் கொல்லப்படுவதும் இவ்வாறான மின் சார வேலிகளால் மக்கள் கொல்லப்படுவதுமாக மாறி மாறி ஏதுமறியாத அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டே வருகின்றனர்.

போருக்கு நேரடியாக முகங்கொடுக்க திராணியற்ற இராணுவத்தினர், போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் மக்கள் சக்தியைப் படுகொலை செய்வதனூடாக எமது போராட்டத்தை நசுக்க எண்ணுகின்றனர். இந்த இராணுவத்தின் கபடத்தனத்தை எமது மக்கள் நன்குணர்ந்தவர்களாகவே உள்ளனர். இந்தக் காடையர்களுக்குப் பயந்து அடிபணிந்துவிட எமது மக்கள் தயாராக இல்லை. இந்த நேரத்தில் இராணுவத்தினருக்கு ஒரு கோரிக்கையை விடுக்கின்றோம். எமது மக்களின் வாழ்விடங்களை விட்டு உடனடியாக உங்கள் இருப்பிடங்களுக்குச் செல்லுங்கள். இல்லையேல் உங்கள் வாழ்வு எங்கள் வாழ்விடங்களில் முடிந்ததாக வரலாறு அமைந்துவிடும். எனவே, எம்மைக் கொலை செய்ய எண்ணுவதை நிறுத்தி உங்களைக் காப்பாற்ற உரிய நடவடிக்கை எடுங்கள்.

இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி இளைஞனுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், இளைஞனை இழந்து துடிக்கும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெவ்வேறு பகுதிகளில் வீரச்சாவடைந்த தேசிய துணைப்படை வீரர்கள் விபரம்!

கிளிநொச்சி —

வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவடைந்த தமிழீழ தேசியத் துணைப்படைவீரர்கள் 15 பேரின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் அறி வித்துள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு :

25.04.1991 அன்று இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டபோது : குழந்தைவேல் கண்டுமணி (யோகு) – சம்பூர் 05.

05.03.1996 அன்று திருகோணமலை கடற்பரப்பில் ஏற்பட்ட தாக்குதலின் போது : இராசேந்திரம் மகேந்திரராசா – கடற்கரைச் சேனை பாடசாலை முன்பாக.

03.11.1988 அன்று சந்தன வெட்டையில் வைத்து இந்திய இராணுவத்தின் பதுங்கித் தாக்குதலின் போது : செல்லையா காளிராசா (அப்பா) – 3 ஆம் வட்டாரம் கட்டைபறிச்சான்.

26.09.1993 அன்று இலக்கந்தையில் இராணுவத்தின் பதுங்கித் தாக்குதலின்போது : இராசரட்ணம் சிறிகந்தராசா (குஞ்சி)

07.06.1987 அன்று ஆலங்கேணி பகுதியில் இராணுவத்தினரின் எறிகணை வீச்சில் : மாரிமுத்து மனோகர கிறீஸ்ணானந்தராசா (ரஞ்சன்) – கிளிவெட்டி.

08.04.1994 அனறு மல்லிகைத் தீவு பச்சைவெளியில் இராணுவத்தினரின் பதுங்கித்தாக்குதலின்போது: மயில்வாகனம் புலேந்திரன் – மேன்காமம், கிளிவெட்டி.

12.10.1996 அன்று பூநகரியில் வைத்து இராணுவத்தின் பதுங்கித் தாக்குதலில் செம்புக்குட்டி மகாலிங்கம் (கெனடி) – பூநகர் ஈச்சிலம்பற்று.

13.07.1988 அன்று கட்டைபறிச்சான் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டபோது : இராஜப்பு யேசுராசா (சிக்குறு) – சூடைக்குடா 1.

18.04.2003 அன்று மூதூர் பகுதியில் இராணுவத்தினரதும் முஸ்லிம் காடையர்களினதும் தாக்குதலில் காயமடைந்து 25.04. 2003 அன்று வீரச்சாவடைந்த : மாணிக்கராசா ரமணன் – முதலாம் வட்டாரம், கடற்கரைச் சேனை, மூதூர்.

25.04.1991 அன்று தெகிவத்தை எனுமிடத்தில் இராணுவத்தினர் பதுங்கித் தாக்கியபோது : அருணாசலம் நல்லதம்பி (கந்தசாமி) – 58, பாரதிபுரம், கிளிவெட்டி.

15.02.1992 அன்று இறால் குளிப் பகுதியில் இராணுவம் நடத்திய பதுங்கித் தாக்குதலின்போது : சிகமாலை பயஸ் நவரட்ணராஜா – நாவலடி இறால்குளி – தற்காலிக முகவரி: நாவலடி அகதிமுகாம்.

20.07.1991 அன்று கல்லரப்பு பகுதியில் இராணுவத்தின் சுற்றிவளைப்பின்போது : சித்திரவேல் கந்தசாமி (கந்தன்) – பூமரத்தடிச் சேனை, ஈச்சிலம்பற்று – ஆகியோர் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## குருநகர் காவலரணை அகற்றுமாறு கோரி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம் —

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் உள்ள படையினரின் காவலரண் அகற்றப்படவேண்டும் என்று கோரி, குருநகர் மீனவர் அபிவிருத்திச் சங்கத்தால் நேற்றுமுன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இறங்கு துறைப் பகுதியிலுள்ள படையினரின் காவலரண் பகுதியில் அமைக்கப்பட்ட மின்சாரவேலியில் சிக்கி அதிகாலை தொழில் முடித்து வீடுதிரும்பிய இளைஞர் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## சித்திரத் தேருக்கான பவளக்கால் நாட்டும் நிகழ்வு

கொக்குவில் —

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் 7 ஆம் திகதி காலை 7.20 மணிக்கு, புதிதாகக் கட்டப்பட்டுவரும் சித்திரத் தேரின் பவளக்கால் நாட்டும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் வருடாந்த மஹோற்சவத் தேர்த் திருவிழாவின்போது புதிய சித்திரத்தேர் பவனி நடைபெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (206)

## அடிக்கல் நாட்டும் நிகழ்வு

பருத்தித்துறை —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி தும்பளை கிழக்கு பகுதியில் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு அடிக்கல் நாட் டும் வைபவம் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் போரூட் நிறுவன அதிகாரிகள் மற்றும் இந்தப் பகுதிகளில் நிரந்தர வீடமைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

## ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளில் 1420 ஆசிரியர்களுக்கு அனுமதி!

மானிப்பாய் —

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் இரண்டு வருட காலப் பயிற்சிகளை வழங்கும் பொருட்டு நேற்றுமுன்தினம் தொடக்கம் 1420 ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்குவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி – கோப்பாய், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, கொட்டகலை ஆகிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்குத் தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் 500 பேரும், மகரகம, உனவட்டுன, பலப்பிட்டிய, பேராதனை ஆகிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்குச் சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் 765 பேரும், ஆங்கில மொழிமூல ஆசிரியர்கள் 155 பேரும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

மேலும் பயிற்சி பெறாத இன்னும் 2 ஆயிரம் ஆசிரியர்களுக்கு அடுத்த வருடம் இதேபோன்று அனுமதி வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

**ஜப்பானிய ஜெபிக் நிறுவனத்தால்**

## ஆறு கட்டட வேலைகள் யாழில் மேற்கொள்ளப்படும்!

மாகாண கட்டடங்கள் திணைக்களத்தால் ஜப்பானிய ஜெபிக் நிறுவனத்தின் உதவியுடன் யாழ். மாவட்டத்தில் 06 கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் பி.தங்கராஜன் தெரிவித்தார்.

தற்பொழுது இந்த 06 கட்டட நிர்மாண வேலைத் திட்டங்களும் மேற்படி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்தக் கட்டட வேலைத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை மருந்தகம், பருத்தித்துறை மருத்துவ வளாகம், தெல்லிப்பளை மருத்துவமனை நோயாளர் விடுதி மற்றும் ஊழியர் விடுதி, அச்சுவேலி மருத்துவமனை நிர்வாகக் கட்டடம் – கட்டம் 3, நோயாளர் விடுதி ஆகிய 06 கட்டட நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை நீர்ப் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட 25 கட்டட நிர்மாணப் பணிகளில் பெரும்பாலானவைகளும் இந்த மாத இறுதிக்குள் நிறைவுசிபற இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தென்மராட்சி வலய ரீதியில் ஆசிரிய சேவை இடமாற்றம்!

தென்மராட்சி —

தென்மராட்சி வலயப் பாட சாலைகளுக்கிடையே கடந்த முத லாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஆசிரியர் சேவை இடமாற்றப் பட்டியல் ஒன்று வலயக் கல்விப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றப் பட்டியலின்படி, திருமதி.ம.வரதராஜா (மனைப் பொருளியல் பயிற்சி) கொடிகாமம் அ.த.க.பாடசாலைக்கும், திருமதி கே.செல்வநாயகம் (கலைப் பட்டதாரி) கைதடி குருசாமி வித்தியாலயத்துக்கும், ஞா.செல்வநாயகம் (சமூகக் கல்வி) நாவற்குழி மகா வித்தியாலயத்துக்கும், என்.மகேந்திரன் (விஞ்ஞானப் பயிற்சி) சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்துக்கும்,

திருமதி அனுலாதேவி பிரபாகரன் (வர்த்தகப் பட்டதாரி) கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்துக்கும், செல்வி ரஞ்சனா சபாபதி (ஆரம்பக்கல்வி) சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்கும், ந.பாலசுப்பிரமணியம் (கலைப் பட் டதாரி) மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்துக்கும், திருமதி ராகினி தயாபரன் (விஞ்ஞானப் பயிற்சி) மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்துக்கும்,

திருமதி சற்குணவதி இளங்கோ (விஞ்ஞானப் பயிற்சி) மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலைக்கும், திரு மதி ப.ஸ்ரீஸ்கரன் (ஆரம்பக் கல்வி) மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலைக்கும், செல்வி ய.செல்வராசா (ஆரம்பக்கல்வி) மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்துக்கும், திருமதி சி.சிவசரணநாதன் (விஞ்ஞானப் பயிற்சி) கைதடி குருசாமி வித்தியாலயத்துக்கும், திருமதி நிர்மலாதேவி சுதர்ஷன் (கலைப் பட்டதாரி) நாவற்காடு கணபதிப் பிள்ளை வித்தியாலயத்துக்கும் இடமாற்றப் பட்டுள்ளனர். (31)


# நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

**கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையால் இக்ராட் (ICTAD) தரம் M-9 பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.**

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:- 04.07.2005 ஆம் திகதி தொடக்கம் 13.07.2005 ஆம் திகதி பி.ப. 3 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 14.07.2005 ந.ப. 12.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி 14.07.2005 பி.ப.2.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டலின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை – செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற் வரி |
|---|---|---|---|---|
| 01 | புனர் நிர்மாணம், பொது நூலகம் கோண்டாவில் | 4750.00 | 500.00 | 75.00 |
| 02 | குளங்கரை வீதி, கோண்டாவில் - கல்லிட்டுத் தாரிடல் | 1450.00 | 500.00 | 75.00 |
| 03 | பொதுக்கிணறு நீர்தாங்கி திருத்தம் - குடியேற்றத் திட்டம் திருநெல்வேலி | 3300.00 | 500.00 | 7500 |

**தலைமை அலுவலகம்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**திருநெல்வேலி.**
**01.07.2005.**

**பொன்னையா வைரமுத்து,**
**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

(சி-4258)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## எதிர்க்கட்சிகள் கோரினால் மட்டுமே
# பொதுக்கட்டமைப்பு உடன்பாடு நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு!

கொழும்பு—

நாடாளுமன்றம் இன்று கூடும்போது அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இணைந்து கைச் சாத்திட்ட பொதுக்கட்டமைப்பு நகலை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டால், அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தயாராக உள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பித்த பொதுக்கட்டமைப்பு நகலும், கைச்சாத்திடப் பட்ட நகலும் ஒன்றுதானெனவும் தெரிவித்த அவர், கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பு நகலை, சமர்ப்பிக்குமாறு எவராவது கோரினால், அது சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்தார்

இதேவேளை - அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்ட பொதுக்கட்டமைப்பு நகல், இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படலாமென தாம் எதிர்பார்ப்பதாக, ஜே. வி. பியின் நாடாளுமன்றக்குழுத்தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பு நகல், இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டுமென, பிரதமர் மகிந்தராஜபக்ஷவிடம் கோரியுள்ளோம். எனவே, அந்த நகல் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

## பொதுக்கட்டமைப்பை...

சிங்கள நீதிமன்றுகளில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுவிட்டன. மதில்மேல் பூனையாக இதுவரை நாளும் மௌனமாக இருந்து வந்த ஐக்கிய தேசியக்கட்சியும், பொதுக்கட்டமைப்பில் பிழைகள் கண்டுபிடித்து கண்டன அறிக்கையும் விடுத்துள்ளது. சிங்களப் பத்திரிகை உலகமும் இவர்கள் அனைவரினதும் இனவாதக் கருத்துக்களை ஆதரித்தும், பெரிதுபடுத்தியும் சிங்கள மக்களிடையே இனவெறி உணர்வூட்டி வருகின்றன.

சந்தரிகாவின் கூட்டணி அரசு முறிந்து குழப்பங்கள் ஏற்பட்டு - நெருக்கடிகளை அதிகரித்து - ஆட்சி கவிழும் புறச்சூழலும் உருவாகி வருகிறது. புதிய தேர்தலுக்கான அரசியற் சூழல்களும் தோன்றிவிட்டன.

மொத்தத்தில் சிங்கள அரசியல் உலகம் முழுமையாகக் குழம்பியுள்ளது. உறுதியான அரசு என்ற அரசியல் அம்சம் இப்போது கொழும்பில் இல்லை. இந்தக் குழப்ப அரசியற் சூழலில் இப்போதைக்கு பெருமாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கவும் முடியாதுள்ளது.

இந்த நிலையில் கைச்சாத்திடப்பட்ட கட்டமைப்பை நடைமுறைப்படுத்த அரசு விரும்புமா! அல்லது அதனால் இயலுமா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

சந்திரிகாவின் அரசு உடன்பாட்டைச் செயற்படுத்தாது விட்டால் அர்த்தமற்ற பொறுமையை தொடர்ந்து கடைப்பிடிக்கும்படி சர்வதேச சமூகம் புலிகளின் தலைமையக் கோரமாட்டாது என்று தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. சுனாமி பேரழிவு தாக்கி ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. இந்தக் காலப்பகுதி முழுவதும் சர்வதேச சமூகத்தின் அமைதி முயற்சிக்குப் புலிகள் இயக்கம் முழு ஒத்துழைப்புகளையும் வழங்கி வந்திருக்கிறது. ஆனால், சிங்கள அரசோ சர்வதேச சமூகத்துடன் தொடர்ச்சியாக முரண்பட்டே வருகிறது.

இந்த நிலையில் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பந்து புலிகளிடமும் இல்லை, சிங்கள அரசிடமும் இல்லை. அது சர்வதேச சமூகத்தின் கைகளில்தான் உள்ளது. சிங்களத்தின் கடும்போக்கிற்கெதிராக சர்வதேச சமூகம் செயற்படவேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதேவேளை சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கும் - வற்புறுத்தல்களுக்கும் செவிசாய்க்க சிங்கள அரசு தவறினால் உடன்பாட்டின் பிரகாரம் வட - கிழக்கிற்கான உதவி நிதியை விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு வழங்கி தமிழ் மக்களின் துயர்துடைக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்றும் புலிகள் இயக்கம் கோருகின்றது. என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொல்லப்பட்ட...

மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணா குழுவை வழிநடத்தும் பொறுப்பை ஏற்றுச் செயற்பட்டதாகவும் - கருணா குழு முக்கியஸ்தரான பிள்ளையான் - இவர்களின் தொடர்பாளராகச் செயற்பட்டுவந்ததாகவும் கூறப்படுகிறது.

கிழக்கில் மர்மக் கொலைகளை மேற்கொள்ளும் - இரு முஸ்லிம் குழுக்கள் உள்ளிட்ட ஏழு தமிழ் அமைப்புக்களை ஒன்றிணைத்து இந்த அணியை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட நேரடியாக வழிநடத்தி வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இரகசியக் குழுவை வழிநடத்திய இராணுவ புலனாய்வுத்துறையின் மூவர் கொல்லப்பட்டதை அடுத்து அதிர்ச்சியடைந்த இராணுவத் தளபதி, நேரடியாக மட்டக்களப்புக்குச் சென்று நிலைமையை மதிப்பிட்டதாகவும் கூறப்படுகிறது.

இதன்போது இரகசிய அணியைச் சேர்ந்த படையினர் மற்றும் தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களை அவதானமாக இருக்குமாறு அவர் எச்சரித்ததாகவும் அந்த இணையத்தளச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நோர்வேக்கு...

நிறுத்தினர். சமாதான முயற்சிகளில் நோர்வே பாரபட்சம் காட்டுவதாகத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

## தமிழர்...

கரும்புலி மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசங்களில் எழுச்சியுடன் இடம் பெறவுள்ளன. வீதிகள்தோறும் நினைவு வளைவுகளும், மஞ்சள் சிவப்புக் கொடிகளும் கட்டப்பட்டு கரும்புலிகள் நினைவுப்படம் தாங்கிய ஊர்திகள் பவனி வருகின்றன.

அத்துடன், கரும்புலிகள் நாளை முன்னிட்டு பல்வேறு இடங்களிலும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நிதர்சனம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட கடற் கரும்புலிகள் பாகம் - 9, தேசத்தின் புயல்கள் பாகம் - 4 பாடல் இறுவட்டுகளும், உயிராயுதம் பாகம் -4 வீடியோ விவரணச் சித்திரமும் இன்று வெளியிடப்படவுள்ளன.

யாழ். குடாநாட்டில் கோட்ட ரீதியாக கரும்புலிகள் எழுச்சி நாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. தீவகத்தில் புளியங்கூடலிலும், வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், தென்மராட்சியில் மாவடி பிள்ளையார் ஆலயத்திலும், வலிகாமத்தில் சங்கானை, வழக்கம்பரையிலும் கரும்புலிகள் தின நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

## புலிகளின்...

லுமில்லை. எவ்வாறாயினும், அண்மைக்காலமாக கிழக்கில் படையினர் கொல்லப்பட்டு வருவதானது யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியது எனவும் அவர் தெரிவித்தார்.

# அரிசி ஆலை மீதான கிரனேட் தாக்குதலில் இளைஞர் பலி!

அம்பாறை—

அம்பாறை மாவட்டம் - அக்கரைப்பற்று, பட்டியடியில் அரிசி ஆலை ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் காய மடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சந்திவெளியைச் சேர்ந்த சபாபதி அகிலன் (வயது 28) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

பாலசுப்பிரமணியம் கதிரமலை (வயது 45), வேலுப்பிள்ளை தெரிவின்பம் (வயது 40) ஆகியோர் காயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## நீதிபதி...

முன்னிலையில் வழக்கின் இறுதி விசாரணை நடத்தப்பட்டது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான வழக்கு விசாரணை மாலை 4.30 மணிக்கு முடிவுற்றது.

நிசாந்த உதயகுமார, மொகமட் நவ்பர், துவாரா அபேவக்கிரம, ஏ.எல்.ரூபசிங்க, சுமேதா நிரோஷன் ஆகிய ஐவருக்குமே மரண தண்டனை விதிக்கப்பட்டது. 248 பக்கங்கள் அடங்கலான தீர்ப்பை நீதிபதி ஆறுமணிநேரமாக வாசித்தார்.

நீதிபதி சரத் அம்பேபிட்டிய சில மாதங்களுக்கு முன்னர் அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். இதனையடுத்து பாதாள கோஷ்டி தலைவரான நவ்பர் உட்பட ஐந்துபேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை குறித்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டதையடுத்து கொழும்பு மேல் நீதிமன்றச் சூழலில் முழுமையான பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## குருநகர்...

துறைக்குச் செல்லும் பாதையை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முட்கம்பி வேலிகள், மின்சார இணைப்புக்கள் உடன் அகற்றப்படவேண்டும். பாஸ் நடை முறை உடன் விலக்கப்பட வேண்டும். சுதந்திரமாகக் கடலுக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பு வதற்கு இராணுவத்தினரின் தடைகள் விலக்கப்பட வேண்டும். போன்ற கோரிக்கை விடுத்து மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் மாலை 3.30 மணிவரை உண்ணாவிரதப் போராட்டத்திலும் கலந்துகொண்டனர். அதேவேளை - குருநகர் இறங்குதுறைப் பகுதியில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் -

எமது சொத்துக்களைத் திருப்பிக் கொடு, பாஸ் நடைமுறையை முற்றாகத் தடைசெய், எமது குடியிருப்புக்களை விட்டுக்கொடு, இராணுவ வேலிகளை முற்றாக அகற்று, எமது தாயகத்தை விட்டு உடன் வெளியேறு, எம்மை சுதந்திரமாக தொழில்செய்ய விடு, போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு காணப்பட்டனர்.

அதேவேளை நேற்றுக்காலை 10 மணியளவில் கடற்கரைவீதி சவக்காலைச் சந்தியில் அமைந்துள்ள இராணுவ காவலரண் முன்பாக பாதைகளை மறித்து கற்கள் மரங்களால் தடைகள் போடப்பட்டு ரயர்கள் எரிக்கப்பட்டன.

தொடர்ந்து உயிரிழந்த இளைஞனின் இறுதிச் சடங்கிலும் மீனவர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். இதன் காரணமாக நேற்றுக் குருநகர் பகுதியில் உள்ள சந்தை, கடைகள் என்பன மூடப்பட்டு வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டன. அப்பகுதி மீன வர்கள் எவரும் நேற்று கடலுக்குச் செல்லவில்லை.

இதேவேளை - குருநகர் மீனவர்கள் தமது கோரிக்கை அடங்கிய மகஜர்களை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட ஆயர், கடற்தொழில் திணைக்களம் ஆகியோரிடம் கையளித்தனர்.



காட்சி
பக்கம் 2 பார்க்க

# நாசா அனுப்பிய விண்கலம் வால் வெள்ளியுடன் மோதியது!
## அமெரிக்க விஞ்ஞானிகள் புதிய சாதனை



அமெரிக்காவின் நாசா அனுப்பிய விண்ணாய்வுக்கலம் ஒன்று பூமியிலிருந்து 8.3 கோடி மைல்கள் தூரத்திலுள்ள டெம்பிள்வன் என்ற வால் நட்சத்திரத்தின் மேற்பகுதியில் சென்று மோதியது.

வால் நட்சத்திரத்துடன் மோதுவதற்காகவே அனுப்பப்பட்ட இந்த விண்கலத்திலிருந்து பிரிந்த ஆய்வுக்கலம் இரண்டு மணி நேரப் பயணத்துக்குப் பின்பு திட்டமிட்டபடி வால் நட்சத்திரத்துடன் மோதியது.

அது மோதியபோது கற்களும், பாறைகளும் வால் நட்சத்திரத்திலிருந்து தெறித்தன. இது ஹொலிவுட் படத்தில் காட்டப்படும் மெய்சிலிர்க்கும் காட்சி போன்று இருந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இந்த மோதலின் தாக்கத்தால் ஏற்பட்ட விளைவுகளை விஞ்ஞானிகள் ஆராய உள்ளனர்.

இந்த மோதலுக்காக நாசா 33.3 கோடி டொலர்கள் செலவு செய்ததா கத் தெரிவிக்கப்படுகிறது. திட்டமிட்டபடி ஆய்வுக்கலம் மோதியதை - அதைக் கொண்டுசென்ற விண்கலம் படம்பிடித்து அனுப்பியதைக் கண்ட விஞ்ஞானிகள் ஒருவரோடு ஒருவர் கட்டித் தழுவித் தங்கள் மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டார்கள்.

# மாடு பிழக்கச் சென்ற இளைஞர் சடலமாக மீட்பு

நெடுந்தீவு—

மூன்று நாட்களாகக் காணாமற் போயிருந்த நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த கோவிந்தன் விஜயதீபன் (வயது 23) என்ற இளைஞர் நேற்றுக்காலை நெடுந்தீவு மேற்கிலுள்ள லோறன்சியார் கோவில் கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை காலை அவரது வீட்டிலிருந்து மாடு பிடிப்பதற்காகச் சென்ற இந்த இளைஞன் அன்று மாலைவரை வீட்டுக்குத் திரும்பாததால் உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றபோதே நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், நேற்று நண்பகல் ஊர்காவற்துறை நீதிவான் பிறேம்சங்கர் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

மரண விசாரணைக்காக நேற்றைய தினமே சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டதையடுத்து சடலம் நேற்று விசேட படகு மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

(113)

# ஜனாதிபதி சந்திரிகாவுடன் முஸ்லிம் எம்.பிக்கள் சந்திப்பு

கொழும்பு—

சுனாமி நிவாரணசபை தொடர்பாக முஸ்லிம் அமைச்சர்கள் இன்று ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கவுள்ளனர். ஜனாதிபதி மாளிகையில் இன்று மாலை 4.30 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட சிறிலங்கா முஸ்லிம் சாங்கிரசின் அமைச்சர்களான நஜீவ் ஏ. மஜீத், ரிசாத் பதியுதீன், அமீர்அலி ஆகியோரும் பிரதியமைச்சர் உசைன் பைலாவும் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளக்கூடும்.

கைச்சாத்திடப்பட்டிருக்கும் உடன்படிக்கையில் திருத்தங்களைச் செய்தல், பிரதேச மற்றும் மாவட்ட குழுக்களின் அதிகாரங்களை தெளிவுபடுத்தல் ஆகியன தொடர்பான யோசனைகள் கடந்தவாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதாகவும் இந்த யோசனைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் ஆராய்ந்து விட்டு பதிலளிப்பதாக ஜனாதிபதி கூறியிருந்தார். இந்நிலையிலேயே இன்று சந்திப்பு நடைபெறவுள்ளது.

இன்றைய சந்திப்பின் முடிவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்பிரச்சினை தொடர்பாக தமது முடிவை அறிவிப்பார் என்று எதிர்பார்ப்பதாக பிரதியமைச்சர் உசைன் பைலா நம்பிக்கை வெளிட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்
## வைத்திலிங்கம் குலசேகரம்பிள்ளை
(விஜயன்)

சரவணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 268, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியில் வசித்தவருமாகிய வைத்திலிங்கம் குலசேகரம்பிள்ளை (விஜயன்) அவர்கள் 03.07.2005 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - அன்னபூரணி அவர்களின் அன்பு மகனும், நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற செல்லம்மா - குலசேகரத்தின் அன்புக் கணவரும், ஓய்வுபெற்ற ஆசிரியர் பேரம்பலம், பொன்னுத்துரை, ஓய்வுபெற்ற ஆசிரியர் கேதாரநாதன், நாகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற குமாரகுலசிங்கம் ஆகியோரின் சகோதரரும், தெய்வேந்திரன் (ஈசன் - கனடா), கருணாகரன் (உதயன் - நோர்வே), கருணாநிதி (சித்திரா - கனடா), தயாநிதி (சுசி - கனடா), ஐங்கரன் (இந்திரன்-கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாதேவி, வேலாயுதம், சிவராசா, சுபாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும், புனிதன், தமிழினி, சரண், சாங்கீதா, பரதன், துவாரகா, தணிகையன், கேசவன், துர்க்கா, ஆதவன், அபிராமி, பீஷ்மன், நிவேதா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஈசன் (மகன்)
கனடா - 4162845252

(1971)

இப்பத்திரிகை இல.267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்று கரும்புலிகள் நாளில் வெளியாகின்றது

மற்றவர்கள் இன்புற்றிருக்கவேண்டும் என்பதற்காக
தன்னை இல்லாதொழிக்கத் துணிவது
தெய்வீகத் துறவறம்.
அந்தத் தெய்வீகத் துறவிகள் தான்
கரும்புலிகள்.




நிதர்சனமும்
தர்மேந்திராக் கலையகமும்
மகளிர் பிரிவும்
உருவாக்கியுள்ள
கரும்புலிகள் சிறப்பு
வெளியீடாக
கரும்புலிகளின்
உணர்வுகளைத் தாங்கி வருகின்றது.




யாழ்.ரமணனின் இசையில்
உருவாகிய
தேசத்தின் புயல்கள்
பாகம் - 04 இறுவட்டு.
இசைப்பிரியனின் இசையில்
உருவாகிய
கடற்கரும்புலிகள்
பாகம் - 09 இறுவட்டு.
நிதர்சனம் மகளிர் பிரிவின்
உருவாக்கத்தில்
உயிராயுதம்-
பாகம் - 04 வீடியோ விவரணச் சித்திரம்.




தமிழீழத்தின் தலைசிறந்த பாடகர்களான -
எஸ்.ஜி.சாந்தன், ஜெயா. சுகுமார், நிரோஜன்,
யுவராஜ், இசையரசன், சந்திரமோகன்,
வசீகரன், திவாகர், றொபேட்,
திருமலைச் சந்திரன்,
யாழ்.ரமணன், வரதன், ஜெயபாரதி,
மேரி, ஜெகனி ஆகியோருடன்
தமிழகப் பாடகர்களான-
எஸ்.என்.சுரேந்தர், கல்பனா, சஞ்சித்
ஆகியோர் பாடிய பாடல்கள்
ஒலிப்பதிவு: மலையவன், பவானந்த்.

ஊடக அனுசரணை
புலவர் வீடியோ
யாழ்ப்பாணம்.

(C/4263)

# அறிவித்தல்

**EXPOAIR**
*your friend in the skies...*

இத்தால் பொது மக்களுக்கு அறியத் தருவது யாதெனில்,
தற்பொழுது வர்த்தக ரீதியான நோக்கம் கருதி

## எக்ஸ்போ ஏவியேஷன் (பிறைவேட்) லிமிடெட்டும்
## லயன் ஏயார் (பிறைவேட்) லிமிடெட்டும்

**இணைந்து**

உள்நாட்டு விமான சேவையை நடாத்திவருகின்றது. இந்த இணைந்த நடைமுறையானது எதிவரும் 16.07.2005 அன்றிலிருந்து, இரு நிறுவனங்களுக்குமிடையில் நிறுத்தப்படவுள்ளது.

எனவே இனிமேல் **எக்ஸ்போ ஏயார்** விமானச் சீட்டுக்களை வைத்திருக்கும் பயணிகளுக்கு மட்டுமே எக்ஸ்போ ஏவியேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனம் பொறுப்பேற்கும் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முகாமைத்துவம்**
**எக்ஸ்போ ஏவியேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்,**
**466, காலி வீதி, கொழும்பு - 03.**

---

**நமது ஈழநாடு**
தமிழ் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நடாத்தும் 2005 ஆம் ஆண்டு தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கென இலங்கையிலுள்ள முன்னணி ஆசிரியர்கள் இணைந்து வழங்கும்

## முன்னோடிக் கருத்தரங்கு

**விபரம் விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்**

**யாழ்.மாவட்டத்துக்கான அனுசரணை வழங்குவோர்**

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்



செலிங்கோ லைஃப்
சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது செலிங்கோ
சுன்னாகக் கிளை

**DSI**
சுப்ப சூஸ்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


BOC
ரண் கெகுழு
சிறுவர் சேமிப்புக் கணக்கை
மண்டபத்தில் ஆரம்பிக்கலாம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்

யாழ்.மாவட்டத்திலுள்ள மாணவர்கள் கீழுள்ள கூப்பன்கள் ஐந்தை நிரப்பி உடனடியாக "சந்தைப்படுத்தல் பிரிவு, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்." எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**கிளிநொச்சி மாவட்டத்துக்கான அனுசரணை**

மீண்டும் புதுப்பொலிவுடன்... உங்களின் இக்காலத் தெரிவுக்கு...



# குமரகுரு
## புடவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்.சாலை, கிளிநொச்சி.
Tel : 021 - 228 5971



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாணவர்கள் கீழுள்ள கூப்பன்கள் ஐந்தை நிரப்பி "நமது ஈழநாடு, கிளைக்காரியாலயம், 152, யாழ்.சாலை கிளிநொச்சி" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
இங்கே வெட்டவும்

## விண்ணப்பப் படிவம்

பெயர் :- ..............................................

தற்போதைய முகவரி:- ..............................................

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :- ..............................................

மாவட்டம் :- ..............................................

| அலுவலக பாவனைக்கு | |
|---|---|
| இலக்கம் | |
| மாவட்டம் | |

..............................................
பெற்றோர்/பாதுகாவலர்/ஆசிரியர்கையொப்பம்

..............................
மாணவர் கையொப்பம்

---

# தணலாகும் கரும்புலிகள்

படையினரைப் பெருமளவில் குவித்துக்கொண்டு
பளபளக்கு மாயுதங்கள் தரித்துக்கொண்டு
அடிவருடி யுடல்வளர்க்கும் கருமிகள்தம்
ஆதரவி னோடுமனை புகுந்து கொண்டு
வடமராட்சி மக்களையே யழித்துவிட்டு
வல்லமையோ டெழுந்து தலை நிமிர்ந்தவேளை
இடியிடித்த கர்ஜனையாய் கப்டன் மில்லர்
இருளினிடை கயவர்படை நொருக்கிவிட்டான்.

வானின்று இழிகின்ற நீரின்றி
கழனியிடை வாடுகின்ற பயிரெனவே
கோ னின்றி வாடுகின்ற மக்களிடை
கொடுமைகளைக் கட்டவிழ்க்கும் இராணுவத்தின்
நானென்ற மமதையினை யடக்கிவைக்க
நாட்டினிலே யாருமின்றித் தவித்தவேளை
கானின்று வந்தனரக் கரும்புலிகள்
கயவர்படை பஞ்சாகிப் பறந்ததுவே.

தாயகத்தை மீட்டெடுக்கும் நினைவினோடு
தனிநாட்டை யமைக்கின்ற உறுதியோடு
பேயகத்துச் சிந்தனையால் கொடுமை நாடி
பெட்புறைந்த தமிழீழச் சீர்கெடுத்து
ஆயாசத் தோடிருக்கு மெதிரிதன்னை
நினையாத நேரத்தில் அழித்தொழிக்கப்
பாயுமெழில் வேங்கைகளின் தலைவன் நல்கும்
ஆணையினால் தணலாகும் கரும்புலிகள்

-மாரீசன்

---

# தங்க உடல் தீ சுமந்தீர் வாழி!

| | | | |
|---|---|---|---|
| ஆண்டாண்டு | காலமெங்கள் | அன்னைதந்தை பூமிமண்ணில் | |
| அடங்கிஒடுங்கி | அடிமையாகி | அழிவது | வாழ்வா? |
| நீண்ட எங்கள் | பரம்பரையும் | நீசர்வந்து | நாசஞ்செய்ய |
| நிர்க்கதியாய் | ஊர் அலைந்தும் | வாழ்வது | வாழ்வா? – என்று |
| சீண்டியவர் | சிரமறுக்கச் | செந்தீயாய் | எழுந்து வந்த |
| சக உதிரச் | சிற்பிகளே | வாழி! | வாழி! |
| தீண்டியவர் | இந்தமண்ணைத் | தாண்டி ஓட | மாட்டாமல் |
| தற்கொடையாய் | வந்தகரும் | புலியீர் | வாழி! |
| | | | |
| பொங்குதமிழ் | பூமலர்ந்து | பைந்தமிழர் | விடியல்தேடத் |
| துங்க உடல் | தீசுமந்தீர் | வாழி! | வாழி!! |
| எங்கள் தமிழ் | வரலாற்றில் | ஏற்றம் எழில் | உயர்வுகொண்ட |
| துங்கநிகர் | கவசங்களே | வாழி! | வாழி!! |
| இங்கு எங்கள் | இறைமை தன்னை | எடுக்கவரு | பகையுமஞ்ச |
| உங்களையே | தந்து காவல் | செய்தீர் வாழி! | – இது |
| வேங்கை விளை | தேசமென்று | வழிசமைத்து | விரைந்த உங்கள் |
| பாங்கினிலே | பலரெழுவார் | வாழி! | வாழி!! |

- சேரன் சிவராசா

---

# காவியச் சொத்துக்கள்



வெடி சுமந்து – பகை
மடியுடைத்த
வேழங்கள்!
தாவியெழுந்தலை மீதும்
தளராது தரையோடும்
களமாடிக் கரைந்த
காவியங்கள்!
உரைநடையும் – கற்பனை
கவிநடையும்
எடுத்தியம்ப முடியா
எழுவான் கதிர்கள்!
கந்தகம் சுமந்து
செந்தமிழ் காத்த
வீரிய வித்துகள் – இவர்கள்
தமிழின் காவியச் சொத்துகள்!

–நெற்கொழுதாசன்
வல்வை.